ஷைலக்

தீபாவளி பண்டிகையன்று

உங்களை சந்திப்பார்

இதில்

சாமா

நடிக்கிறார்

டைரேக்ஷன் :

சாமா & ராமு

படப் பிடிப்பு : **கே. பிரபாகர்.**

சைத்ரீகர் : **எச். சாந்தாராம்.**

ஒலிப் பதிவு :

டி. பி. வால்கே.

விவரங்களுக்கு :

பாரத் பிக்சர்ஸ்

மௌப்ரேஸ் ரோடு, மைலாப்பூர், சென்னை.

தந்தி : BARPIC.   டெலிபோன் : 86218.

1800
OFFICE OF THE REGISTRAR ... MADRAS 4-JAN 1941

  1—10—40.

ஸ்ரீராமஜெயம்.

ஜகன் மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. —ஸ்ரீ வீரராகவ கவி.

மலர் 17	விக்ரம ஹு புரட்டாசி மீ அக்டோபர் 1940	இதழ் 10

இராகம் : தோடி. தாளம் : த்ரிபுடை.

பல்லவி

தாரினி தெலுபவையா! தாஸரதே!
தயஜேஸி ப்ரோவுமையா தாஸரதே! (தா)

அநுபல்லவி

தீருடௌ ஸ்ரீராமசந்த்ரா! நீது திவ்ய
வாரிஜ பாதமுலோ வச்சி சேருட மஞ்சி. (தா)

சரணம்

சந்ததமுதண்ட்ரி நீது சல்லனிநாமமு பஜிஞ்ச
அந்தமுதோ அபயமிச்சு அரவிந்தலோசனு நாது
பந்தமந்துவதலி நாது பதிதம்புலனு தீர்ச்சு
மந்தஹாசவதனு கோதாநாதா மனஸுகரகி வேக. (தா)

ஷை கீர்த்தனை "சாமளநாதன்" 142 ம் பக்கத்தில் வெளியாகியுள்ளது ஸ்வரத்திற்கு உள்ளே 13-வது பக்கம் பார்க்கவும்.

9-10-40 ந்தேதி மதராஸ் ரேடியோவில்

சென்னை ஸ்ரீ. ஏ. பார்த்தசாரதி

மாலை 5-0 முதல் 6-0 வரை
,, 6-30 ,, 7-0 ,,

நாதஸ்வரம் வாசிப்பார்

கேட்டு ஆனந்தமடையுங்கள்.

183046
சென்னை-600 0

பிரார்த்தனை செய்வோம்

'புரட்டாசி மாதம் பிறக்கப்போகிறது' என்பதைக் கேட்கும் போதே குழந்தைகளுக்கோர் குதூகலம். ஏன்? நவராத்திரி மகோத்ஸவத்தின் ஞாபகமும், உத்ஸாகமும் பிறந்துவிடுகின்றன. அதே போல் ஐப்பசி மாதம் என்றால் தீபாவளியின் பேரானந்தக்கூத்து கண்முன்பு தோன்றும். இதேபோல் ஒவ்வொரு மாதத்தை நினைக்கும்போது ஒவ்வொருவித ஆனந்த ஊற்று சுறக்கின்றது.

'அக்டோபர் இரண்டாந்தேதி' என்று நினைக்கும்போதே நம்மையறியாத உணர்ச்சியும் குதூகலமும் பொங்கி எழுகின்றன. தேச பக்தியில்லாதவர்கள்கூட "மகாத்மா நீடூழி வாழ்க. மகாத்மாவின் மகிமையே ஓர் தனித்த பெருமை வாய்ந்ததல்லவா! அடடா! உதடசைந்தால் உலகம் அசையும்; நாக்கசைந்தால் நாடசையும் என்ற பழமொழியைச் சரியாக இந்த மனிதரிடம் காண்கிறோமே" என்று வியப்பார்கள். ஏற்கெனவே காந்தி பயித்தியங்கொண்டவர்களின் களிப்புக்கும் கொண்டாட்டத்திற்கும் கேட்கவேண்டுமா!

கொடியவெந் நாக பாசத்தை மாற்ற
　　மூலிகை கொணர்ந் தவனென்கோ?
இடிமின்னல் காக்கும் குடைசெய்தா னென்கோ?
　　என்சொலிப் புகழ்வதிங் குனையே?
விடிவிலாத் துன்பஞ் செயும் பராதீன
　　வெம்பிணி யகற்றிடும் வண்ணம்
படிமிசைப் புதிதாச் சாலவு மெளிதாம்
　　படிக்கொரு சூழ்ச்சி நீ படைத்தாய்!

என்று பாரதியார் பாடியுள்ளதுபோல், என்னவென்றுதான் அந்தப் புனிதஸ்வரூபியை, த்யாகச் சுடரை, சத்திய வீரரை நாம் புகழமுடியும்? புகழ்ந்தால் மட்டும் என்ன பிரயோசனம்? அதனால் அந்த உத்தமரின் உள்ளம் குளிர்ந்துவிடுமா! ஒருபோதும் குளிராது. முகஸ்துதிக்கு எதிர்நோக்கி நிற்கவும், திருப்தியடையவும் அவர் காலில் ஒட்டிய தூசியும் இச்சிக்காது.

அந்தப் புனித வள்ளலின் உள்ளம் குளிரவேண்டுமாயின் ஒரே ஒரு வழிதான் உண்டு. அதைச் செய்தால் அதனால்தான் அவர் இதயமலரை மலரச் செய்யலாம். அதுதான் கதர் அணிதல், கதரை ஆதரித்தல், கதரை ஓங்கி வளரச் செய்தல். நம் நாட்டுக்காகப் பல விதங்களிலும் த்யாகஞ்செய்து ஸ்வராஜ்ய மூலமந்திரத்தை உபதேசிக்

கும் மகானுக்கு நாம் பிரதியுபகாரம் செய்ததாகும்; காணிக்கை செலுத்தியதாகும்.

நாம் பல பண்டிகைகள் சந்தோஷமாய்க் கொண்டாடுவது போல் இரண்டாந்தேதி காந்தி ஜயந்தியன்று வீடுதோறும் மக்கள் மங்களஸ்நானம் செய்து, கதரணிந்து பகவானுக்குப் பூஜைசெய்து "மகாத்மா இன்னுமொரு நூற்றாண்டு நீடூழி வாழும்படியான கிருபை செய்யவேண்டும்" என்று மனமார, இதயபூர்வமாய் பிரார்த்தனை செய்து இதன்மூலம் நாமும் தேசத்திற்கு ஒரு சிறிய பணி செய்ததாக மகிழ்வோம். நமது கடமையைச் செய்யும் முறையில் ஏழைகளுக்கு அன்னமளிக்கும் தருமத்தையும் செய்த பலனை அடைகிறோம். வெறும் வாய்ப்பூச்சலில் பலனில்லை. கதரை வாங்கிக் களிப்புறுங்கள். காந்தியின் பலம் அதிகரிக்கப் பாடுபடுங்கள். இந்த ஒரு உதவியைத்தான் அந்த மகான் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

மகாத்மா நீடூழி வாழ்க! அவரது லக்ஷ்யம் ஜெயம் பெற்றோங்குக.

வெனிஸ் கோர்டில் யூதன்

சென்ற வாரத்தில் ஜெய பிலிம்ஸ் 'B' ஸ்டூடியோவில், யூதர்கள், வெனிஸ்தேசத்து ப்ரபுக்கள், மாதர்கள், அடிமைகள், காவலாளிகள் ஏகமாகக் கூடியிருந்தார்கள். தனது பத்திரப்படிப் பணத்தைக் கொடுக்கத் தவறிய கிறிஸ்துவ வியாபாரியிடம் ஷைலக் கருணை காட்டுவானென்று யாவரும் எதிர்பார்த்தார்கள். ஆனால், அவன் தன் ஜாதி மத தேச புத்தியைக் காண்பித்தான். சட்டம் அவனுக்கநுகூலமாயிருந்தது. கிருஸ்துவ வியாபாரிகள் யூதர்களை அவமானப்படுத்தியதைக் குறித்துப் பழிவாங்கத் தீர்மானித்தான். யூதனுக்கநுகூலமாகச் சட்டமிருந்ததால் நீதிபதி ஒன்றும் செய்யமுடியவில்லை. சட்டமளித்த ஒரு பவுண்ட் மாமிசத்தை அடைய முந்தினான்....

"ஒரு பவுண்டு மாமிசமே தவிர ஒரு துளி ரத்தங்கூட சிந்தக்கூடாது" என்றாள் போர்ஷியா. யூதன் திக்பிரமையடைந்தான். தனது முதலையாவது கொடுக்கக் கெஞ்சினான். ஆனால் போர்ஷியா, சட்டம் கொடுத்ததைத் தவிர வேறொன்றும் முடியாதென்றாள். தோல்வியடைந்த யூதன் தன் இனத்தினருடன்போய்விட்டான். சாமர்த்தியமான நியாயவாதி தனக்குச் சேரவேண்டிய பணத்திற்காக பஸ்ஸானியோவிடமிருந்து மோதிரத்தை வாங்கிக் கொண்டு சென்றான்...பணத்தையும் காலத்தையும் வக்ஷயஞ் செய்யாமல், இந்த மனத்தையுருக்கும் காட்சி எடுக்கப்பட்டது.

யூதனாக நடித்த சாமா தன் முழு சாமர்த்தியத்தையும் காட்டினார். ஜனகம் புருஷ நியாயவாதியாக நன்கு நடித்தாள். தண்டனை யடைந்த பஸ்ஸானியோவின் நடிப்பு கண்டோரை கண்கலங்கச் செய்தது.

அடுத்த ஸீன் ஷைலாக்கின் வீட்டிற்கு மாறுகிறது.



நமது வாசகர்களுக்கு

நமது "மோஹினி" ஜூலை இதழில் வெளியான "ரேடியோ டயரி" யில்(6வது பக்கத்தில்) "கேள்விகள்" என்கிற தலைப்பில் எழுதியிருந்த விஷயம் உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். "அந்த கேள்விகளுக்குப் பதில் சர்க்காரிடமிருந்தல்லவா எதிர்பார்க்கவேண்டும்?" என்று எழுதியிருந்ததல்லவா? ஷை விஷயமாக சென்ற ஆகஸ்ட் 15உ யன்று அகில இந்திய ரேடியோவின் தலைமை ஸ்தாபனமாகிய டில்லி நிலையத்திலிருந்து பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீஸர் நமக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகிறார்:—

"Your Radio Diary shows a keen and lively understanding of the problems connected with broadcasting and fully deserves the popularity which we have no doubt it enjoys.

As regards your suggestion about a change of wave-lengths for the Trichinopoly Station, we have the following comments to offer :—The choice of wavelengths is made on technical considerations and in the case of medium wavelengths, one of the chief considerations is the ground conductivity. The medium wave service is essentially a direct ray service. As the radiated energy travels along the ground it gets absorbed; the shorter the wavelength the greater the absorption. If therefore, the largest area is desired to be covered by the direct ray service the longer should be the wave length used.........

We appreciate your suggestion about *a more even spacing* of the Tamil News bulletins. But it is regretted that, owing to editorial and programme difficulties, it cannot be adopted *under the present circumstances*. We shall be always glad to ......give our most careful consideration to any suggestions which you may have to offer."

தமிழ்செய்தி அறிக்கை விஷயமாக நமது ஜூலை இதழில் அபிப்பிராயம் தெரிவித்திருந்தபடியே, இந்த அக்டோபர் முதல் ஒலிபரப்பு நேரத்தை மாற்றி பிற்பகல் 2-45 மணிக்கு தமிழ்ச் செய்தி அறிக்கை அமைத்துள்ளதற்காக நாம் அ. இ. ரே. அதிகாரிகளைப் பாராட்டுகின்றோம். இப்போதுதான் பல ஆங்கிலமறியாத தமிழ் ரேடியோ அபிமானிகளுக்கு வேளை தவறாது காலையிலும், பிற்பகலிலும், இரவிலும் செய்திகள் அறிய சௌகரியமாயிருக்கும்.

—ரேடியோ ஆசிரியர்.

லாவண்யசர்மா:—என்ன மிஸ்டர் ஆனந்தம்! சென்ற தரம் வந்தபோது உமது பேட்டி அகப்படுவதே கஷ்டமாயிருந்தது. ஆனால் உமதுகுறிப்புகளை

மட்டும் படித்துவிட்டுச் சென்றேன். உம்முடன் நேரில் பேசித்தெரிந்து கொள்ளாது குறிப்புகளைமட்டும் படித்தால் எனக்குத்திருப்தியாகுமா?

நித்தியானந்தர் :—பேசுவதற்கென்ன சமாச்சாரமா இல்லை? உமக்குப் போதுதான் இல்லை.

லா :—எப்போதுந்தான் வேலை வேலை யென்று அவஸ்தைப்பட வேண்டியிருக்கிறது. சிறிது நேரமாவது சிநேகிதர்களைக் கண்டு பொது விஷயங்களைப்பற்றி ஆனந்தமாகப் பேசாவிட்டால் எப்படி? நீர் தாராள மாக எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசலாம்.

நி :—அப்படியென்றால் சரி. முதலில் குறைகளைப்பற்றியும், பிறகு சில புதிய அம்சங்களைப்பற்றியும் சொல்லுகிறேன்.

1. பொறுக்கமுடியவில்லை

இரு நிலைய ஒலிபரப்பிலும் சிறிது காலமாக இசைத்தட்டுச் சங்கீதம் அதிக கௌரவ ஸ்தானத்தைப் பெற்றுவருவதானது மிகவும் அதிருப்தியாக விருக்கின்றது. கேட்டதையே திரும்பத் திரும்பக்கேட்பதென்றால் நமது பொறுமையைச் சோதிப்பதுபோன்றல்லவா ஆகிறது? அதிலும் "டாக்கி ரிகார்டுகள்" சிலவற்றில் சங்கீதம் என்ற பெயருடன் பலவித சப்தங்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளன. ராக சுத்தமோ, இனிமையோ ஒன்றுமேயில்லாத ரிகார்டுகளை ஒலிபரப்பி நேரத்தைக் கடத்துவதைவிட, ஒலிபரப்பு நேரத்தைக் குறைத்துவிடுவதுமேலல்லவா? சினிமா சங்கீதம் ஒன்றுதான் மோசமாயிருக்கிறதென்று நான் சொல்லவில்லை. ரிகார்டின் மேல் எழுதப்பட்டிருக்கும் ராகத்தின்பெயருக்கும், அதில் பாடப்பட்டிருப்பதற்கும் சம்பந்தமேயில்லாத சில ரிகார்டுகள் வெளிவந்திருக்கின்றன. (உதாரணமாக சென்ற மீ 5உ யன்று திருச்சியிலிருந்து 2-45—3.0க்குள் ஒலிபரப்பிய இசைத்தட்டுகளில் எத்தனை அளவு சாரங்காராகமும், செஞ்சுருட்டி ராகமும் பாடப்பட்டிருக்கின்றது?) அம்மாதிரி ரிகார்டுகளை ஒலிபரப்பாது நிறுத்தினார்களாகில், ரேடியோ நிலையத்தார் நம் சங்கீதத்திற்குப் பெரிய தொண்டு செய்தவர்களாவார்கள் என்றே சொல்வேன்.

இது தவிர, ஒரே தினத்தில் ஒரே ஒலிப்பரப்பில் இரு நிலையங்களிலும் ஒரே இசைத்தட்டு ஒலிப்பரப்பப்படுவதை நிறுத்தவேண்டும். உதாரணமாக ஒரே பாட்டு (ஜயமாயாவதார) சென்ற மீ 22உயன்று 1 மணிக்கு சென்னையிலும், சுமார் 2-25க்கு திருச்சியிலும் ஒலிப்பரப்பப்பட்டது. அந்த பாட்டு திகட்டாத அமுதா? தவிர, ஹிந்துஸ்தானி ரிகார்டுகளை அடிக்கடி ஒலிபரப்புவது அநாவசியம். ஏனென்றால் ஷை சங்கீதம் கேட்க விரும்புவோர், பம்பாய், கல்கத்தா, டில்லி முதலிய நிலையங்களை 'ட்யூன்' செய்யலாம். ஷை நிலையத்தார் தினசரி ஒருமணி நேரத்திற்கு மேலாக பிரபல ரிகார்டுகளை ஒலிப்பரப்புகிறார்கள். தென்னிந்தியரிகார்டுகளை ஒலிப்பரப்புவதிலும் சிறிது "தணிக்கை" செய்தல் நல்லது. எதை ஒலிபரப்பலாம், எதைக்கூடாது என்று தேர்ந்தெடுக்கவேண்டும். அப்போதுதான் அபத்தசங்கீதமும், அதனால் ஏற்படும் தலைவலியும் குறையும். பொதுவாக, சமீபவெளியீடுகளையும், சுத்தமான சங்கீதமுள்ள ரிகார்டுகளையும் மாத்திரம் ஒலிபரப்புவது நல்லது.

2. "சமரஸம்"

சமரஸத்தில் பலவிதமுண்டு. ஒன்று, வாத்திய கோஷ்டி சங்கீதத்தில் எல்லா வாத்தியங்களும் நன்கு கலந்து சமரஸம் ஏற்படுவது. மற்றொன்று, வாய்ப்பாட்டுக்குத் தக்கவாறு பக்கவாத்தியங்கள் அமைந்து சமரஸமேற்படுவது, இன்னுமொன்று, பாடுபவரின் 'பாணி'க்கும், பக்கவாத்தியக்காரர்

களின் 'பாணி'க்கும் சமரஸம் ஏற்படுவது. இருநிலைய வாத்தியகோஷ்டி சங்கீதத்திலும் முதலாவதாகக் கூறிய சமரஸம் காணப்படுகிறது. இரண்டாவதாகக் கூறிய சமரஸம் சில கச்சேரிகளில் சில சந்தர்ப்பங்களில் தவறி விடுகிறது. உதாரணமாக, சென்ற ஸ்ரீ 7௳ ராஜா அய்யங்கார் கச்சேரியில் தில்லானு பாடுகையில் 'சமரஸம்' ஏற்படவில்லை. மூன்றாவதாகக் கூறிய சமரஸம், "நக்ஷத்திரங்கள்" என்று கொண்டாடப்படும் சிலர் வாத்திய கோஷ்டியுடன் பாடுகையில் அநேகமாக ஏற்படுவதே கிடையாது; 'கதம்ப ராக' சங்கீதந்தான் நமக்கு அளிக்கப்படுகிறது.

3. அனௌன்ஸ்மெண்டு.

சில நிகழ்ச்சிகளில் பாட்டுகளின் ராகத்தை அனௌன்ஸ் செய்யாதிருப்பதை மிகவும் பாராட்டுகிறேன். ஏனென்றால் அத்தகைய நிகழ்ச்சிகளில் எந்த பாட்டு எந்த ராகம் என்று சொல்வது மிக கடினம்! கேட்பவர்களில் ஒவ்வொருவருக்கு ஒவ்வொருவிதமாகத் தோன்றும் வண்ணம் அதி சாமர்த்தியமாக வாத்யகோஷ்டியுடன் இசைத்துப் பாடுகிறார்கள். ராக சுத்த மில்லாது பாடப்பட்டுள்ள இசைத்தட்டுகளை ஒலிபரப்பும்போது ராகத்தின் பெயரை அறிவிக்காதிருப்பது நலம். சென்னை அனௌன்ஸர் இன்னமும் தனது விசேஷ அம்சமான குறைநிறைந்த அறிவிப்பைக் கைவிட்டதாகத் தெரியவில்லை. சென்ற ஸ்ரீ 1௳ யன்று இரவு சுமார் 8-5க்கு "ராஜலக்ஷ்மிக்கு பக்கவாத்தியமாக செம்பை வைத்தியநாத பாகவதரும், சேதுராமையாவும் பிடில் வாசிக்கிறார்கள். அடுத்த பாட்டு சேதுலார" என்று அறிவித்தார். ஸ்ரீ செம்பை பக்கவாத்தியம் வாசிக்கிறாராம்!

4. "அஞ்சல்"

ஒரு நிலைய நிகழ்ச்சியை இன்னொரு நிலையத்தில் அஞ்சல் செய்யும் விஷயத்தில் திட்டமான கொள்கைவேண்டும். மகா வித்வான்கள் என பல வருடங்களாகப் புகழடைந்துள்ளவர்களின் கச்சேரிகள் சிலவற்றை அஞ்சல் செய்வதில்லை. ஆனால் சர்வ சாதாரணமான பாட்டு அஞ்சல் செய்யப்படுகிறது. இது பொருத்தமாயில்லை. உதாரணமாக பல்லடம் சஞ்சீவிராவ், சௌடய்யா, ராஜரத்னம் பிள்ளை, பெங்களூர் நாகரத்னம்மாள் போன்றவர்களின் கச்சேரிகளை அஞ்சல்செய்யாது அதே சமயத்தில் போட்டிக் கச்சேரிகளை ஒலிபரப்புவது ரஸிகர்களுக்கு சங்கடத்தைத் தருகிறது.

5. புதிய அம்சங்கள்.

அக்டோபர் மாதத்திய நிகழ்ச்சிக் குறிப்புகளைப் பார்க்கையில் சில புதிய அம்சங்கள் அமைக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறோம். முதலாவதாக இருநிலைய கோஷ்டிவாத்திய சங்கீதத்திற்கும் தினசரி மாலையில் போட்டியிருந்தது இப்போது நிறுத்தப்பட்டுள்ளதால் இரு கோஷ்டியினரையும் கேட்கும் சந்தர்ப்பமேற்பட்டுள்ளது. இரண்டாவதாக திருச்சியில் ஹிந்துஸ்தானி பாடம் வாரத்தில் பலநாட்கள் அமைத்திருப்பது போற்றத்தக்கது. மூன்றாவதாக, திருச்சி நிலையத்தில் "தபால் பெட்டி" ஒவ்வொரு வெள்ளியன்றும் திறக்கப்பட்டு நேயர்களுக்குப்பதிலளிப்பது மிகவும் ரஸமாயிருக்கின்றது. ஷை நிகழ்ச்சிக்கு குறைந்தது கால்மணியாவது அளிக்கவேண்டும்: பத்து நிமிஷம் போதாது.

6. சென்ற மாதம்.

சுருங்கச் சொல்லின்,—வழக்கம்போல பலவித்வான்கள் மிகவும் ரஸிக்கத்தக்கவாறு பாடினார்கள். சென்ற மாதத்திய விசேஷ நிகழ்ச்சிகள் இரண்

டைப்பற்றிக் குறிப்பிடவேண்டும். 5உ யன்று திருச்சியில் ஒலிபரப்பப்பட்ட "விநாயக சதுர்த்தி" என்ற நிகழ்ச்சி மிக நன்றாயிருந்தது. விசேஷ தினங்களில் திருச்சி நிலையம் பிரத்தியேக நிகழ்ச்சிகளைத் திறமையாக நடத்துவதில் தனிப் பெருமை யடைந்துள்ளதென நான் பலதரம் சொல்லவில்லையா? அதேபோலத்தான் ஷ நிகழ்ச்சியும்,பாரதி ஞாபகார்த்த நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பப்பட்டன. பாரதி தின நிகழ்ச்சிகள் சிறந்தமுறையில், பலவிதத்திலும் ரஸிக்கும் வண்ணம் அமைத்திருந்ததற்கு திருஷ்டிப் பரிஹாரம் போல இருமுறை ஒலிபரப்பு சிறிது நேரம் தடைபட்டது. சென்னையில் பட்டம்மாள் பாடியதற்கும், திருச்சியில் சுப்புலக்ஷ்மி பாடியதற்கும் மிகவும் வித்தியாசமிருந்ததில் ஆச்சரியமேயில்லை. ஏனெனில் பட்டம்மாள் ஆர்கெஸ்ட்ராவுடன் பாடினார். இம்மாதிரி நிகழ்ச்சிகளில் பாடுபவர்கள் நன்றாகப்பாடினாலும், வாத்திய கோஷ்டியினர் தமது கற்பனையை அதிகமாம் செலுத்தி "இனிமை"யை மாத்திரம் கவனிக்கிறார்கள். மற்ற அம்சங்களையும் நன்கு கவனித்தால் தேவலை...மற்றபடி முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது இளம்பாடகர்களின் கச்சேரிதான். சேலம் ஜி. தேசிகனும், குமாரி ஆர் ரத்தினமும் மிக இனிமையாகவும், கம்பீரமாகவும், அநாயாசமாகவும், நன்றாகப் பாடினார்கள்...சிலர் பெரிய கீர்த்தனைகளை எடுத்துக்கொண்டு தனக்கும் திருப்தியில்லாது கேட்பவர்களுக்கும் ரஸிக்காது பாடுவதைவிட, துக்கடாக்களைப் பாடுவது உசிதம்...மற்றபடி வேறு விசேஷமில்லை.

—வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A., B.L.,

பாரதி—பெண் விடுதலை வீரன்

[பாரதி தினத்தன்று ஸ்த்ரீகள் நிகழ்ச்சிக்காக எழுதப்பட்டது. Published by courtesy of All India Radio, Trichy. —வை.மு.கோ.]

பானுமதி :—என்ன சுமதீ? சற்றுமுன் வந்தேன்; உன்னைக் காணவில்லை. எங்கே போயிருந்தாய்?

சுமதி :—இன்று செப்டம்பர் 11-ந் தேதியல்லவா! புனிதக் கவியரசர் பாரதியாரின் நாளை எங்கள் சங்கத்தில் கொண்டாடினார்கள். அதற்குப் போயிருந்தேன்.

பானுமதி :—ஓகோ! அதான் காலையில் பஜனையில்கூட பாரதிப் பாட்டுப் பாடினார்களா! சங்கத்தில் என்ன நடந்தது?

சுமதி :—பாரதியாரின் பாட்டுப் போட்டி நடந்தது. பாரதியின் கவியைப்பற்றிப் பலர் சொற்பொழிவாற்றினார்கள்.

இந்துமதி :—தேசீயப் பாட்டுக்கள்தானே அவர் செய்திருக்கிறார்; அதைப்பற்றித்தான் பேசினார்களா?

சுமதி :—என்ன இந்து! தேசீயப் பாட்டுகள் மட்டுந்தான் அவர் பாடியிருப்பதாகப் பல பேர் நினைத்திருப்பதுபோல் நீயும்

நினைத்துக் கேட்கிறாயே! பண்டையகாலத்து ஏனைய கவிகளைப் போல பல பொதுவிஷயங்கள், வேதாந்த விஷயங்கள், பக்தி ரஸ மான கீதங்கள், சமரசமான பாடல்கள் எல்லாம் குவியல் குவிய லாகச் செய்திருப்பதோடு பெண்களின் பெருமையைப்பற்றியும் பெண்களின் விடுதலை அவசியத்தைப்பற்றியும் இதுவரையில் பாடி யுள்ள கவிகளைவிட ஒரு படிக்கட்டு மேலாகவே உள்ளக்கிளர்ச்சியும் ஆவேசமும் பொங்கப் பல பாடல்கள் பாடியிருக்கிறாரே! அது நமக்கோர் தனிச்சிறப்பும் பெருமையுமல்லவா?

பானுமதி :—ஏன் சுமதி!

"மாதர் தம்மை யிழிவு செய்யு மடமையைக் கொளுத்துவோம்
வையவாழ்வு தன்னிலெந்த வகையிலும் நமக்குளே
தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும்
ஸரிநிகர் ஸமானமாக வாழ்வ மிந்த நாட்டிலே." (விடுதலை)

என்று பாடுகிறார்களே அதையா நீ சொல்லுகிறாய்?

சுமதி :—அதைவிடப் பதினாயிரம் பங்கு உயர்ந்த இன்னும் அனேகப் பாட்டுகள் அவர் இதயத்தைப் பீறிக்கொண்டு வெள்ள மாய் வந்திருக்கின்றன.

இந்து :—இப்போதுதான் நினைவு வருகிறது. பெண்கள் விடுதலைக் கும்மி என்று ஒரு பாட்டு எழுதியிருக்கிறாராமே...அது உனக்குத் தெரியுமா! எங்கே பாடு கேட்கலாம்.

சுமதி: —தாராளமாக நாமே கும்மியடித்துப் பாடுவோமே.

இந்து :—ஆமாம்....காமாக்ஷிகூட வந்துவிட்டாள். நால்வரும் கும்மியே அடிக்கலாம்.

கும்மியடி தமிழ் நாடு முழுதுங்
குலுங்கிடக் கை கொட்டிக் கும்மியடி
நம்மைப்பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோ மென்று கும்மியடி (கும்மி)

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார். (கும்மி)

கற்புநிலை யென்று சொல்லவந்தா ரிரு
கக்ஷிக்கு மஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக்கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம். (கும்மி)

பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினி லாணுக்கிங்கேபெண்
இளைப் பில்லை காணென்று கும்மியடி. (கும்மி)

வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோ மென்று கும்மியடி

சாதம் படைக்கவுஞ் செய்திடு வோந்தெய்வச்
சாதி படைக்கவுஞ் செய்திடு வோம். (கும்மி)
காத லொருவனைக் கைப்பிடித்தே யவன்
காரியம் யாவினுங் கைகொடுத்து
மாதரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சிபெறச் செய்து வாழ்வமடி. (கும்மி)

இந்து:—அடடா! பாரதியாருக்குப் பெண்களிடம் அத்தனைமதிப்பும் கண்ணியமுமிருக்கிறதைப் பார்க்க ஆச்சரியமாயிருக்கிறதே!

சுமதி:—இதற்குள் ஆச்சரியப்பட்டு விடாதே. இன்னும் கேள். பாரதி பெண்களுக்கு விடுதலையளிக்கும் கருணை உள்ளத்தையுடைய வீரரல்லவா? இதோ பாரு.

பெண்மை வாழ்கென்று கூத்திடு வோமடா
பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா
தண்மை இன்பநற் புண்ணியஞ் சேர்ந்தன
தாயின் பெயரும் ஸதியென்ற நாமமும்.
அன்பு வாழ்கென் றமைதியி லாடுவோம்
ஆசைக் காதலைக் கைகொட்டி வாழ்த்துவோம்
துன்பந் தீர்வது பெண்மையி னாலடா
சூரப் பிள்ளைகள் தாயென்று போற்றுவோம்.
வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா
மானஞ் சேர்க்கு மனைவியின் வார்த்தைகள்
கலியழிப்பது பெண்க ளறமடா
கைகள் கோத்துக் களித்து நின் றாடுவோம்.
பெண்ணறத்தினை யாண்மக்கள் வீரந்தான்
பேணு மாயிற் பிறகொரு தாழ்வில்லை.
கண்ணைக் காக்கு மிரண்டிமை போலவே
காதலின்பத்தைக் காத்திடு வோமடா.
உயிரைக் காக்கும் உயிரினைச் சேர்த்திடும்
உயிரினுக் குயிரா யின்ப மாகிடும்
உயிரினும் மிந்தப் பெண்மை யினிதடா
ஊது கொம்புகள் ஆடு களிகொண்டே.
அன்ன மூட்டிய தெய்வமணிக்கையின்
ஆணை காட்டில் அனலை விழுங்குவோம்
கன்னத்தே முத்தங் கொண்டு களிப்பினும்
கையைத் தள்ளும் பொற்கைகளைப் பாடுவோம்.

இந்து! எத்தனை ஆணித்திறமாய்ப் பாடியிருக்கிறார் பார்த்தாயா! முரசு என்கிற தலைப்பில் இன்னொரு பாட்டுக் கேளு.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்—புவி
பேணி வளர்த்திடு மீசன்;
மண்ணுக்குள்ளே சில மூடர்—நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார்.

கண்க ளிரண்டினி லொன்றைக்—குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ ?
பெண்க ளறிவை வளர்த்தால்—வையம்
பேதைமை யற்றிடுங் காணீர்.

இந்து :—அடேயப்பா! பெண்களை அடிமையாக்கி அழுத்திவிட வேண்டுமென்கிற மேதாவிகளுக்கு நல்ல சவுக்கடியாயிருக்கிறது. ஆமாம், மற்ற கவிகளுக்கும் இவருக்கும் என்னவித்யாசம் சுமதி !

சுமதி :—ஏன் ? வித்யாசம் தெரியவில்லையா? மற்ற கவிகள் இகத்திற்கு வேண்டிய செல்வ சுகபோகங்களை விரும்பாது, பெரும் பாலும் மோக்ஷத்தையே விரும்பி மற்றவைகளை வெறுத்துப் பாடியிருக்கிறார்கள். பாரதியார் ஓர் புதுமைக் கவியாகவன்றோ இருக்கிறார். இகத்திற்கு வேண்டிய சுகங்களைத்தான் அதிகமாக வற்புறுத்திப் பராசக்தியை, காளியை, லக்ஷ்மியை, வாணியை மற்ற எல்லாக் கடவுளையும் வேண்டுகிறார். இந்தப் பாடலைச் சற்று கவனி. எத்தனையோ வேண்டுதல்களில் பெண் விடுதலையைக்கூட எத்தனை அழகாயும், ஆர்வமாயும் புகுத்தியிருக்கிறார் பாரேன்.

ஆனந்தபைரவி ராகம்.

மனதி லுறுதி வேண்டும்
வாக்கினிலே யினிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்படவேண்டும்
கனவு மெய்ப்படவேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்
தனமு மின்பமும் வேண்டும்
தரணியிலே பெருமை வேண்டும்
கண் திறந்திடவேண்டும்
காரியத்தி லுறுதி வேண்டும்
பெண் விடுதலை வேண்டும்
பெரிய கடவுள் காக்கவேண்டும்
மண் பயனுற வேண்டும்
வானக மிங்கு தென்படவேண்டும்
உண்மை நின்றிட வேண்டும்
ஓம் ஓம் ஓம் ஓம் !

பானு :—அடாடா! ஒன்றுகூட பாக்கிவைக்காது சட்டம் போடுவதுபோலல்லவா கேட்கிறார் ?

சுமதி :—இதற்கே ஆச்சரியப்படுகிறாயே ! பானுமதி! இன்னொரு பாட்டிலுள்ள அழகையும், பராசக்தியிடம் அவர் ஐக்யமாகி அதிகாரத்துடன் உத்திரவிட்டிருப்பதையும் பாரு. பாரதியார் பெண்களின் பெருமையை மங்கச்செய்யாது பிரகாசிக்கச் செய்யவேண்டுமென்கிற வீராதலால் அவர் சன்யாசி வாழ்க்கையை விரும்பாது ஒரு பத்தினிப் பெண்ணுடன் தாம் களிப்புற்றிருக்கையில் பராசக்தியே காவலிருக்கவேண்டுமாம். என்ன அதீதமான பக்தி !

இந்து:—சுமதி! எங்கே... அந்த பாட்டைக் கொஞ்சம் பாடேன்.

சுமதி:— கானடா ராகம்.

1. காணி நிலம் வேண்டும்,—பராசக்தி
காணி நிலம் வேண்டும்;—அங்கு
தூணி லழகியதாய்—நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய்—அந்தக்
காணி நிலத்திடையே—ஓர் மாளிகை
கட்டித் தரவேண்டும்;—அங்கு
கேணி யருகினிலே—தென்னைமரம்
கீற்று மிள நீரும்,

2. பத்துப் பனிரண்டு—தென்னைமரம்
பக்கத்திலே வேணும்;—நல்ல
முத்துச்சுடர் போலே—நிலாவொளி
முன்பு வரவேணும்;—அங்கு
கத்துங் குயிலோசை—சற்றே வந்து
காதிற் படவேணும்;—என்றன்
சித்த மகிழ்ந்திடவே—நன்றாயிளந்
தென்றல் வரவேணும்.

3. பாட்டுக் கலந்திடவே—அங்கேயொரு
பத்தினிப் பெண்வேணும்;—எங்கள்
கூட்டுக் களியினிலே—கவிதைகள்
கொண்டுதர வேணும்;—அந்தக்
காட்டு வெளியினிலே,—அம்மா, நின்றன்
காவலுற வேணும்;—என்றன்
பாட்டுத் திறத்தாலே—இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்.

பானு:—என்ன! என்ன! பராசக்தி காவலிருக்கவேண்டுமா? ஆஹாஹா!... கேட்கும்போதே மயிர்ச்சிலிர்க்கின்றது. அவருடைய அந்தராத்மா விரும்பியதுபோலவே இன்று அவருடைய பாட்டின் திறத்தினால் இந்நாட்டில் கிடைத்துள்ள நலன்கள் அனந்தமல்லவா! ஐயோ பாவம்! அவர் உயிருடன் இருந்து அவர் பாட்டின் திறத்து மகிமையைப் பார்க்கவில்லையே.

சுமதி:—அவருடைய ஸ்தூல சரீரம் பார்க்கவில்லையே யன்றி ஆத்மா அந்த ஆனந்தத்தை அனுபவித்துத்தான் வரும். சர்க்கரை தண்ணீரில் கரைந்து உருமாறி மக்களுக்குத் தன் இனிப்பைக் கொடுப்பதுபோல பாரதியார் தனது நிகரிலாத இன்பக் கவிகளால் மக்களை மகிழ்வித்துத்தான் மறைந்துவிட்டார்; ஆனால் அவர் கவியின் இன்பமும் பயனும் என்றும் மறையாதல்லவா!

இந்து:—பாரதியார் இன்னும் கொஞ்சகாலம் உயிருடனிருந் திருந்தால் பெண்களின் விடுதலைக்காக இன்னும் எவ்வளவோ பாடு பட்டிருப்பாரல்லவா! பெண்களில் சிலர் தம்மைத் தாம் அடிமை யாகவும், பேதையாகவும் நினைத்துப் பாழாகிவரும் பயந்தாங்

கொள்ளிகளையும் தைரியலக்ஷ்மிகளாய் வீராங்கனைகளாய் சீறி எழுந்திருக்கச் செய்யும் வீரக்கவிகளைப் பொழிந்திருப்பாரல்லவா ? நமது துர்ப்பாக்கியந்தான் மறைந்துவிட்டார்.

சுமதி :—அப்படிச் சொல்லாதே இந்து ! எப்போதும் உலக விசித்திரமே ஓர் தனித்ததல்லவா ! அவரவர்களின் வாழ்நாளிலேயே பிரகாசிப்பது அரிது. விதிக்கு விலக்காக மகாத்மா ஒருவர்தான் உலகத்தில் உதாரணமாக விளங்குகிறுர். பாரதியாரின் பாடல்களின் பெருமைகளை இப்படி சிறிது நேரம் கேட்டால் மட்டும் போதாது. தினமும் பாடல்களின் சுவையறிந்து படித்துக் களித்துப் பயன் அடையச் செய்யவேண்டுமென்பதுதான் நாம் இனி பாரதியாருக்குச் செய்யும் பிரதியுபகாரமாகும்.



வாணியின் பிரசாதம்

ஸாஹித்தியகர்த்தா : வை. மு. கோதைநாயகி அம்மாள்.

ஸ்வரப்படுத்தியவர் : ஸ்ரீ. ஏ. பார்த்தசாரதி.

8-வது மேளகர்த்தா — **ஹனுமதோடி.**

ஜன்ய ராகம் : — தோடி:

ஆரோஹணம்—ஸம்பூர்ணம்.

ஸ	ரி	க	ம	ப	த	நி	ஸ்
	சுத்த	சாதாரண	சுத்த		சுத்த	கை	

அவரோஹணம்—ஸம்பூர்ணம்.

ஸ்	நி	த	ப	ம	க	ரி	ஸ
	கை	சுத்த		சுத்த	சாதாரண	சுத்த	

இராகம் : தோடி. — திஸ்ரஜாதி - த்ருபுடை.

பல்லவி

1	; ; ●ஸ ரி	கா ம ா	த த ம	தா நீ த நி ஸ் ரி
	தா	ரி ணி	தெனு	ப வைய்
	ஸ்ா ,	; நீ த நி ஸ் ா	ஸ் நி தா பா	ம க ரி ஸ
	யா	தா	ஸ ர	தே

2	ரீ , நி ● ஸ ரி	கா மா	த த ம	தா நீ த நி ஸ் ரி
	ரா மா தா	ரி னி	தெலு	ப வைய்
	ஸ் ரி க் ா ரீ	நி த ம க	ம த நீ த ா	ப ம கா ரீ ஸா
	யா	தா	ஸ ர	தே
3	க ரி ஸ நி ● ஸ ரி	கா ம ா	த த ம	கமதநி தநிஸ்ரி
	ரா மா தா	ரி னி	தெலு	ப வைய்
	ஸ் ரி க் ா ரீ	நி த ம க	ம த நீ த ா	ப ம கா ரீ ஸா
	யா	தா	ஸ ர	தே
4	க ரி ஸ நி ● ஸ ரி	கா ம ா	த த ம	கமதநி தநிஸ்ரி
	ரா மா தா	ரி னி	தெலு	ப வைய்
	ஸ் ரி க் ா ரீ	நீ க்ா ரிஸ் நித	ப த நீ த ப	மக மப தா பம
	யா	தா	ஸ	ர தே .
1	க ரி ஸ நி ● ஸ ரி	கா ம ா	த த ம	கமதநி தநிஸ்ரி
	ரா மா தா	ரி னி	தெலு	ப வைய்
	ஸ் ரி க் ா ரீ	நீ க்ா ரிஸ் நித	ப த நீ த ப	மக மப தா பம
	யா	தா	ஸ	ர தே
	க ரி ஸ நி ● ஸ ரி	கா ம ா	நி த ம	கா ரீ ஸ நி த நி
	த ய	ஜே ஸி	ப்ரோ	வு மைய்
	ஸா ,	; ; த நி ஸ்ா	ஸ் நி தா பா	ப ம கா ரீ ஸா
	யா	தா	ஸ ர	தே
2	க ரி ஸ நி ● ஸ ரி	கா ம ா	த த ம	கம தநி தநி ஸ்ரி
	ரா மா த ா	ரி னி	தெலு	ப வைய்
	ஸ் ரி க் ா ரீ	நீ க்ா ரிஸ் நித	ப த நீ த ப	மக மப தா பம
	யா	தா	ஸ	ர தே
	க ரி ஸ நி ● ஸ ரி	கா ம ா	த நி ஸ் நி தா	பம கரி ஸநி தநி
	த ய	ஜே ஸி	ப்ரோ	வு மைய்
	ஸா ,	; ; ஸநி தநி	ஸ ரி க ம ப த	நிஸ் ரிஸ் நித பம
	யா	தா	ஸ ர	தே ரா
	க ரி ஸ நி ●			
	மா			

அனுபல்லவி

1	; ; ● த நி	ஸ்ா ஸ்ா	ஸ்ா , ரிஸ் நி	த நி த ப
	தி	ரு டௌ	ஸ்ரீ	ரா
	நி த ப ம ப த	நீ த நி	ஸ்ா நி	ஸ்ா ஸ்ா
	ம சந்	த்ரா நீ	து	திவ் ய
2	; ; ● ப த	நீ ; த நி ஸ் ரி	ஸ்ா , ரி ஸ் நி	தநி ஸ்ா நித ரிஸ்
	தி	ரு டௌ	ஸ்ரீ	ரா ம
	நி த ப ம ப த	நீ த நி	ஸ்ா நி	ஸ்ா ஸ்ா
	சந்	த்ரா நீ	து	திவ் ய

; ; ● ப த	நி ஸ் ரி க் ரீ ;	ஸ் ா , ரி ஸ் நி	தநி ஸ் ரி ஸ்ா ;
வா	ரி ஜ	பா த	மு லோ
, , ● ஸ்	ஸ் நி தா பா	ம க ம ப த ப	பம கா ரீ ஸா
வச்	சி ஜே	ரு ட	மஞ் சி
க ரி ஸ நி ●			

சரணம்

, , ● ம	ம ா ம ம	ம க ரி	ரி க ம ா
ஸங்	த த மு	தண்ட் ரி	நீ து
; ; ● ம த	நி த த ம	ம க ரி	ஸ ரி ஸ ா
ச ல்	ல னி நா	ம மு ப	ஜி ஞ் ச
; ; ● ஸ ரி	க ரி ரி ஸ	ஸ ரி ஸ நி த ா	த நி ஸ ரி ஸ ா;
அங்	த மு தோ	அ ப ய்	மி ச் சு
; ; ● ஸ ரி	க ா ம ா	ப த நி த ப ம	த ப த ா
அ ர	விந் த	லோ ச னு	நா து
; ; ● த நி	ஸ் ா ஸ் ா	ஸ் ா , ரி ஸ் நி	த நி த ப
பந் த	ம ந் து	வ த	லி நா
நி த ப ம ப த	நீ த நி	ஸ் ஸ் நி	ஸ் ா ஸ் ா
து ப தி	த ம் பு	ல னு	தீர் ச்சு
; ; ● ப த	நி ஸ் ரி க்ா , ரீ	ஸ் ரி க் ரி ஸ் நி	த நி ஸ் ரி ஸ் ா;
மந் த	ஹா ஸ	வ த னு	கோ தா
, , ● ஸ்	ஸ் நி தா பா ;	ம க ம ப த ப	ப ம க ா ரீ ஸ ா
நா	தா	ம ன ஸூ	க ர கி வே
, ரி ஸ நி ●			
க			

முக்தாயிஸ்வரம்

, , ● ஸ	, ரி கா	ம ா ப	த நி ஸ் ரி
ஸ் ா ,	; நி த	ப ா ம	க ா ம க
ரி நி ஸ	ரி க மா	ப த நி	த நி ஸ் ரி
ஸ் ா ,	; க் ரி	நி த ம	க ா ம க
ரி நி ஸ	ரீ க ம	ப த ா	நி ஸ் நி ரி
ஸ் ா ,	; ; த நி ஸ் ரி	ஸ்ா நி த ப ம	பா மக ரிஸ - மா
க ரி ஸ நி - த நி	ஸரீ க மப-கம	, ப த நி - த ா	, நி ஸ் ரி - க் ரீ ஸ்
நி த - ரி ஸ் ா நி	தப-மா,-பதநி	ஸ் நீ த ப ம	த பாம கரி - கா
, ரி ஸ நி ●			

"நான் போர்ன்-வீடாவை உபயோகித்தேன். நான் அதை ரொம்பவும் விரும்புகிறேன். அது சாப்பிடுவதற்கு நல்ல சுவையுடன் இருப்பதோடு கூட நல்ல மணமும் களைப்பையாற்றக்கூடியதாயுமிருக்கிறது. நான் அதை வழக்கமாகச் சாப்பிட்டுக்கொண்டு வருகிறேன்" என்று

லேடி மிட்டர்

சொல்லியிருக்கிறார்.

வாழ்நாளில் பிறருடைய காரியங்களில் ஈடுபட வேண்டியதற்குள்ள சக்தியையும், திட சரீரத்தையும் அடைவதற்கு வேண்டிய நிரந்தரமான போஷாக்கு வேண்டியதவசியம் எனக்கருதினவர்கள் முதலாவதாக நமது இந்திய ஜன சங்கத்தில் ஈடுபட்டுள்ள ஸ்திரீகள். அதனால்தான் லேடி மிட்டரும், ஜன சங்கத்தில் ஈடுபட்டுள்ள இதர தலைவர்களும் போர்ன்-வீடாவை வழக்கமாகச் சாப்பிடுகிறார்கள். ஏனென்றால் அதில் உயர்ந்த போஷாக்கைத் தரக்கூடிய சாதனங்கள் இருப்பதோடுகூட ஒவ்வொருவரும் விரும்பக் கூடிய மணமும் இருக்கிறது.

அதிக போஷாக்குக்கு வேண்டிய உயர்ந்த சாதனங்கள் இருப்பதுடன் போர்ன்-வீடா சீக்கிரத்தில் ஜீர்ணமாகக் கூடியது. தவிர அதன் போஷாக்கு சில மணி நேரத்திற்குள் 100-ல் 90-பாகம் ஜீவசக்தியாக மாறிவிடுகிறது. ஆகையால் இது ஒரு ருசிகரமான பானம்.



Cadbury's

BOURN-VITA

FOR DAYTIME ENERGY

எல்லாஸ்டோர்களிலும், 1 பவுண்டு அரைபவுண்டு டின்கள் கிடைக்கும். கைப்படாதவை.

"போர்ன்வில்" என்னுமிடத்தில்

காட்பரி கம்பெனியாரால் செய்யப்பட்டது.

22

குழம்பிய நெஞ்சுக்குக் குதூகலம் காணமுடியுமா? சஞ்சல ஸாகரத்தில் மிதப்பதுபோல் தோன்றியது. தனக்குச் சற்று ஆறுதலளித்து மனச்சாந்தியுண்டாக்கி ஆதரவு கொடுத்துவரும் மதுசூதனன் சேர்ந்தாற்போல் 5, 6 தினங்களாக வராததால் விலாஸினிக்கு மிக்க வருத்தமாகவிருந்தது. ஆனால், விசாரிப்பதற்கு பரதேசிப் பெண்ணாகிய அவளுக்கு வேறு என்னவிதமான வசதி யிருக்கிறது? சாதக பக்ஷியைப்போல் தினம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

தெருக்கோடியில் மதுசூதனன் வருவதைக் கண்டு உள்ளம் பூரித்துப் புலகிதமெய்தினாள். மழைத்துளிக்காகத் திரிந்து, கிடைத்த சாதக பக்ஷியைப்போல் விலாஸினியின் உள்ளம் ஆனந்தத்தினால் நிரம்பியது. உள்ளே ஓடிச்சென்று நாற்காலியை இழுத்துப் போட்டுவிட்டு மீண்டும் கதவின் பக்கம் எட்டிப் பார்த்தாள்.

மதுசூதனன் வீதிப்படி ஏறி மெள்ள உள்ளே வருவதைக் கண்டு என்றுமில்லாத இன்ப உணர்ச்சியுடன் அவனை மீறி வரும் புன்முறுவலால் மலர்ந்த முகத்துடன் எதிரில் சென்று "இத்தனை பராமுகம் ஏனோ ஏழையென்மேல்" என்று வாய்விட்டுப் பாடி விட்டாள்.

"யாழோ, குழலோ, தேனோ, பாகோ!" என்று பிரமிக்கும் படி விலாஸினி பாடியதைக் கேட்டதும் மதுசூதனின் உள்ளத்தி லிருந்த விசனப் புசல்காற்றின் மத்தியிலும் சற்று அமைதியும் அவனையறியாத சந்தோஷமும் உண்டாகி இன்பச் சிரிப்பொன்று சிரித்தவாறு நாற்காலியில் உட்கார்ந்தான்.

விலா:—என்ன உடம்பு, ஏன் இத்தனை முகவாட்டம்? கண்கள் ஏன் சிவந்திருக்கின்றன? இத்தனை நாட்களாக ஏன் வரவில்லையோ, என்ன உடம்போ! என்று நான் பயந்ததற்குச் சரியாக ஆகி விட்டதே. ஏன் இந்த மௌனம்—என்று அவள் மனத்தில் பொங்கிக் கொந்தளிக்கும் ஆவல் முற்றும் வெளிப்பட ஆவேசத் துடன் கேட்டாள்.

மதுசூதனனுக்கு பதிலே கூறமுடியாது ஒருவிதமான விசனமும் ஏக்கமும் நெஞ்சில் பெரும் பாறையைப்போல் அழுத்தியது. பெரு மூச்சு அவன் மார்பைப் பிளந்துகொண்டு வந்தது. கண்களில் நீர் ஆறுய்ப்பெருகி ஓடியது. தன் மேல்சவுக்கத்தினால் முகத்தை

மூடிக்கொண்டு தேகங் குலுங்க அழுதுவிட்டான்.

இதைப் பார்த்த விலாஸினியின் உள்ளம் துடித்தது. "என்ன இது?...ஏன் இப்படிப் புலம்புகிறீர்கள்? என்ன விஷயம்? தயவு செய்து சொல்லுங்கள். என்மீது ஏதாவது குற்றமா! அப்படி நான்...

இந்த வார்த்தையைக் கேட்டுத் தாங்கமுடியாத மதுசூதனன், "ஹா!...விலாஸினீ!...ஏதேதோ பேசிக்கொண்டு போகிருயே! உன்மீது ஒரு கடுகளவும் குற்றமில்லே. கடவுள்மீது ஆணையாக உன்னிடம் ஒன்றுமே இல்லே. நீ வருந்தாதே. விலாஸினீ! எல்லாம் நான் செய்த பாவம்! உடம்புக்கு ஒன்றுமே இல்லே. கவலேப் படாதே....உனக்கு உடம்பு ஒன்றுமில்லாதிருக்கிறதா! நீ சந்தோஷ மாயிருக்கிருயா?" என்று கேட்டான்.

விலா:—உங்கள் வார்த்தை முற்றிலும் ஏதோ விநோதமாயிருக் கிறதே! நீங்கள் செய்த பாவமா! புதிதாக திடீரென்று என்ன வந்துவிட்டது? உங்கள் எழில்மிக்க வதனத்தையே நாசம் செய்து உருக்குலேயவடித்து வாட்டும் விஷயம் என்ன? என் மனம் பதைக்கிறதே....

மது:—இந்த உலகமே ஒரு விநோதமல்லவா விலாஸினீ! அதில் என் போக்கில் விநோதம் காணுவது வியப்பா! நான் வராமைக்கு என்னே மன்னித்துவிடு. விலாஸினீ! எல்லாம் காலத்தின்கோலம். நீ நிற்காதே; உட்காரு.

மதுசூதனனின் மாறுதலேயறியாத விலாஸினிக்கு ஒன்றுமே புரியவில்லே. மனத்தில் ஏதேதோ எண்ணமிட்ட வண்ணம் உட் கார்ந்தாள். மதுசூதனனின் முகத்திலிருக்கும் மாறுதலுக்கு ஏதோ பலத்த காரணம் இருந்தே தீரவேண்டும். இல்லாவிட்டால் இம் மாதிரி விசனப்படமாட்டார் என்று மட்டும் தனக்குள் நினேத்துக் கொண்டாள்.

சுவற்றில் மாட்டியிருந்த படத்தின்மீதுள்ள திரைச் சீலே காற்றில் தபாலென்று ஆடி விழுந்தது. விலாஸினி, அதைக் கண்டு ஓட்டமாக ஓடி அந்தத் துணியை எடுத்து கயிற்றில் நன்ருகக் கட்டி மறுபடியும் படத்தில் மாட்டினுள்.

இதைப் பார்த்த மதுசூதனன், "இது யாருடைய படம் விலாஸினீ!" என்று ஒருவிதமான வியப்புடன் கேட்டான். அந்தப் படத்தைப் பார்த்ததுமே விலாஸினிக்கு ஒருவிதமான துக்கம் உண் டாகி கண்ணில் ஜலம் முட்டியது. இவன் கேட்டவுடனே பின்னும்

விசனம் அதிகரித்து முட்டிய ஜலம் விடையளிக்க ஓடி வருவது போல் உருண்டு ஓடியது. அந்த படத்தை நோக்கினுள். மறு படியும் திரைச் சீலையை நீக்கி, "நன்ருகப் பாருங்கள். எனது முன் னறிதெய்வங்களில் ஒன்று இந்த உருவம்" என்று நெஞ்சையடைக் கும் துக்கத்துடன் கூறினுள்.

வியப்புக்கடலில் மிதப்பவன்போல் அந்த படத்தை மது சூதனன் ஆவலுடன் பார்த்தான். விலாஸினிக்கு கோட்டும், தலைப் பாகையும் மாட்டினுல் எப்படி யிருக்குமோ, அதேபோல் அதே சாயலாய் கம்பீரமான தோற்றத்துடன் உட்கார்ந்திருந்த உருவம் இவனை பிரமிக்கச் செய்தது.

அந்த உருவத்தையும் விலாஸினியின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தான். "தாயைப்போல் மகனும், தந்தையைப்போல் மகளும், சாயலிருந்தால் அதிர்ஷ்டமென்றும், சிரேஷ்டமென்றும் சொல்வார் களல்லவா?" என்று கூறியபடியே விலாஸினியின் முகத்தை மறுபடியும் பார்த்தான்.

விலா:—ஆம்! மொழி என்னவோ, பழைய மொழிதான். புதியமொழியல்ல. என் தந்தையைப்போல் நான் இருப்பது பிரத்தி யக்ஷந்தான்; ஆனுல் பழமொழிப்படிக்கு அந்த அகாரந்தான் காண வில்லை. தாயை எமனிடம் பறிகொடுத்ததுதான் ஒரு அதிர்ஷ்டம். உயிருடன் தந்தையைப் பறிகொடுத்துத் தவிப்பது எத்தகைய அதிர்ஷ்டம்!—என்று விசனத்தின் மிகுதியால் கூறிவிட்டான்.

மது:—என்ன ஆச்சரியம்! உன் தந்தை உயிருடன் இருக் கிருரா! அவர் இருக்கையில் நீ இத்தகைய பரதேசியாய் ஏன் வாழ வேண்டும்? அவர் எங்கிருக்கிருர்? நீ ஏன் அவரிடம் இல்லாது தனியாய் இதுகாறும் இருந்தாய்?—என்று ஒருவிதமான பதை பதைப்புடன் கேட்டான்.

விலாஸினியின்பாடு வெகு தர்மசங்கடமாகிவிட்டது. தன்னைப் பற்றி இதுகாறும் அவன் அபாரமான மதிப்பு வைத்து அன்பு செலுத்துகையில் தனது தகப்பனுரின் நிலைமையை எப்படி விவரித் துக்கூறுவது என்கிற ஓர் கலக்கமும் தியக்கமும் உண்டாகி துக்க மாய்ப் பொங்கி வந்துவிட்டது. ஆனுலும் பதில் சொல்லாதிருந்தால் அவன் என்ன நினைப்பானே என்றும் தோன்றியதால் சற்று சமாளித்துக்கொண்டு, "காலத்தின் கோலம் என்றும், இந்த உலகமே ஒரு புதுமை என்றும் தாங்கள் சற்று முன்பு கூற

வில்லையா! அது எனக்கு மட்டும் விதிக்கு விலக்காகிவிடுமா? காலத்தின் கூத்துதான் எல்லாம்" என்று சலிப்புடன் கூறினள்.

மது :—விலாஸினீ! உங்களுடைய அந்தரங்க விஷயத்தை அன்னியனுகிய நான் கேட்பது பிசகுதான். மரியாதையும் இல்லை தான். இருப்பினும், விலாஸினீ! கடவுள் நமக்குள் பிணைத்துவிட்ட பாசத்தின் வேகத்தினல் நான் மரியாதையையும்மீறி உன்னைக் கேட்க முற்பட்டுவிட்டேன். என்னிடம் கூற உனக்கு ஆக்ஷேபனை இல்லை யென்றுல் என்னிடம் தெரிவி. இல்லையென்றுல் வேண்டாம்" என்று கூறிவிட்டு அவள் முகத்தையே உற்றுக் கவனித்தான்.

விலாஸினியின் கண்களில் தடை கட்டமுடியாது நீர் பெருகி ஓடுகிறது. திக்கித் திக்கிப் பேசியவாறு, "இந்த ஜென்மத்தில் இந்த ஏழைக்கு உங்களையின்றி, வேறு திக்கில்லை என்று நான் ஆண்டவன் மீது ஆணையாக நம்பியிருக்கிறேன். அத்தகைய தங்களிடம் கூறுவதற்கு ஆக்ஷேபனையும் உண்டா! ஒன்றுமில்லை. ஆனல், பரிசுத்தமான அன்பு நிறைந்த உங்கள் இதயத்திற்குக் கட்டாயம் ஆயாஸம் ஏற்படும் என்றுதான் பயப்படுகிறேன்...

மது :—விலாஸினீ! நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். பரிசுத்தமான அன்பு என்றும் பரிசுத்தமானதாகத்தானிருக்கும். அது ஒன்றும் மாசுபடாது. தைரியமாய் சொல்லு.

விலா :—சொல்வதற்கொன்றுமில்லை. சொன்னபிறகு என்னை வெறுக்கமாட்டீர்களே? நான் நிச்சயமாய் நம்பலாமா?

மது :—விலாஸினி! இதென்ன பேதைமை! எந்த அம்சத்தில் என்னிடத்தில் அவநம்பிக்கை கண்டிருக்கிறய்? என்னை அவ்வாறு நினைத்துவிட்டாய்? உன் மனதில் எத்தகைய சஞ்சலமும் வேண்டாம். விலாஸினி! நீ பயப்படாமல் தைரியமாய் சொல்லு.

விலா :—சுமார் 10 வருடங்களுக்கு முன்பு என் தகப்பனும் தாயாரும் என்னையும், மூத்த ஆண் குழந்தையையும் வைத்துக் கொண்டு வெகு இன்பகரமாக வாழ்க்கை நடத்தி வந்தார்கள். தேனும் பாலும்போல் தம்பதிகளிருந்தார்களென்றுல் அது என் பெற்றோர்கள்தான் என்று அன்று பார்த்த பெரியார்கள் இன்னும் சொல்கிறுர்கள். என் தகப்பனர் கௌரவமான உத்தியோகம் வகித்து வந்தார். எல்லா அம்சங்களிலும் கண்டிப்பான மனிதர். சத்தியத்திற்குக் கட்டுப்பட்ட உத்தம குணமும், பரோபகார சிந்தையும், உயர்ந்த நோக்கமும், திடசித்தமும், சீரிய ஒழுக்கமும்

ஒருங்கே அமையப்பெற்ற உத்தமர். அவர் வயதில் சிறியவராயிருப்பினும் அவரிடத்தில் பல பெரியோர்கள் யோசனை கேட்காமலிருக்க மாட்டார்களாம். ஒரு கிராமத்திற்கு அதன் நாட்டாண்மைக்காரர் எப்படியோ அப்படி என் தகப்பனுர் இருந்த பேட்டைக்கு நாட்டாண்மைக்காரராக விளங்கினுர். செல்வாக்கின் சிறப்பு சிகரத்தை எட்டியிருப்பினும், விதியின் விளையாட்டு அதனையும் தகர்த்து விடும் அல்லவா?

மது :—ஐயோ! கேட்கும்போதே பயங்கரமாயிருக்கிறதே! ஆஹா! அத்தகைய விபரீதம் என்ன நடந்துவிட்டது விலாஸினீ! சீக்கிரம் சொல்லு.

விலா :—என் தகப்பனுருடன்கூட உத்தியோகத்திலிருந்த ஆப்த நண்பர் ஒருவர் முக்கியமான அலுவலின் நிமித்தம் வெளியூருக்குப்போக நேர்ந்தது. அச்சமயம் அவருடைய மனைவி மக்களுக்குத் துணையாகவிருந்து பார்த்துக்கொள்ளும்படி நம்பிக்கைக்குப் பாத்திரமான என் தகப்பனுரிடம் சொல்லிவிட்டுச் சென்ருர். என் தகப்பனுரும் மித்ரப்ரேமையின் நிமித்தம் அவர்கள் வீட்டிலேயே இருந்து ஜாக்கிரதையாக கவனித்துவந்தார். அந்த நண்பருக்கு வெகு நாளாக விரோதமாயிருந்த ஒருவன் இந்த சந்தர்ப்பத்தைத் தனக்கு அனுகூலமாகச் செய்துகொண்டு நடு நிசியில் அவ்வீட்டில் பிரவேசித்து, ஊருக்குச் சென்றிருந்தவரின் மனைவியை துராக்ருதம் செய்யவும், சொத்துகளைக் கொள்ளையடிக்கவும் முற்பட்டான்.

மது :—என்ன! அப்படியா அக்கிரமம் செய்யத்துணிந்தான்?

விலா :—போதாக்காலக்கொடுமை அப்படியும் செய்யத் துணிந்தது; அதற்குமேலும் செய்யத் தூண்டியது. தனியறையில் படுத்திருந்த அந்தம்மாள் இவ்வநியாயத்தைச் சகிக்காது பெரும் கூச்சலிட்டார்கள். வாசலில் படுத்திருந்த என் தகப்பனுரும், காவல்காரனும் இக் கூக்குரலைக் கேட்டு எழுந்து ஓடினுர்கள். அந்த துராக்ருதன் கையிலகப்பட்டதையெல்லாம் கொண்டு என் தந்தையையும், வேலைக்காரனையும் தாக்கினுன். அந்தம்மாள் கண்ணீர் பெருக, ஆவிதுடிக்க, "ஐயோ! என்னை நாசம் செய்துவிட்டானே! இனி நான் எதற்கு உயிர் வாழவேண்டும்! பல வருடங்களாக என் கணவர்மீது தீராப்பகையும் பழியும் கொண்டிருந்த அச்சண்டாளன் இன்று என்னைக் கொன்றுவிட்டானே. ஐயோ! என் பர்த்தா

முகத்தில் நான் எப்படி விழிப்பேன்!" என்று ஆவேசத்துடன் கூறியவாறு அந்த வேகத்தில் மேல் மாடியிலிருந்து கீழே உருண்டு விட்டார்கள்.

மது :—ஆ! என்ன! பிழைத்தார்களா?

விலா :—பிழைத்திருக்கவேண்டுமென்றால் அப்படி ஏன் விழ வேண்டும்? பொறி கலங்கும் நேரத்திற்குள் நடந்துவிட்ட இந்த சம்பவத்தால் என் தகப்பனாரின் மூளையே சிதறிவிட்டது. ஒரு உத்தமியின் கற்பை உரிஞ்சி, அவளைச் சித்திரவதை செய்த அவ்வரக்கன்மீது ரௌத்திராகாரமான ஆத்திரம் பொங்கியதால் அருகிலிருந்த இரும்பு நாற்காலியை அச் சண்டாளன்மீது வீசினார். அவ்வளவுதான். காலதேவதையின் நர்த்தனம் கரைகடந்த விபரீதத்தில் முடிந்தது. அந்த நாற்காலி எக்கச்சக்கமாகப் பட்டதில் அக் கொடும்பாவியின் ஆவி நீங்கியது.

மது :—ஐயோ! கொலையல்லவா?

விலா :—ஆம்! கொலையென்று நினைப்பவர்களுக்குக் கொலை தான். வேண்டுமென்று வஞ்சகத்தினால் செய்த கொலையல்லவென்பது உங்களுக்குத் தெரியும். உயிரினுமினிய கற்பை உரிஞ்சிய விஷப்பூச்சியை தண்டிக்கும் முறையில் செய்த காரியம் எதிர்பாராத முறையில் உயிரைப் போக்கிவிட்டது. பிறகு வீதியில் ஓடிப் பார்க்கும்போது அந்தம்மாளும் பிணமாகக் கிடந்தார்கள். அக்கம் பக்கம் கும்பு கூடிவிட்டது. எந்த மூலையில் என்ன நடக்குமெனக் காத்திருக்கும் போலீஸார் வருவதற்குக் கேட்கவேண்டுமா? அவர்களும் கூடிவிட்டார்கள். வீணாக வளர்த்துவானேன்! விதி எப்படி எப்படியோ ஆட்டிவிட்டது. ஊருக்குச் சென்றிருந்த நண்பரும் வந்து சேர்ந்தார். எதிரியின் மனிதர்கள் அந்த வேலைக்காரனுக்குச் சரியானபடி லஞ்சம்கொடுத்துத் தம் கைக்குள் போட்டுக்கொண்டு, நண்பரின் மனைவிக்கும் என் தகப்பனாருக்கும் ஏதோ நட்பு இருந்ததாகவும் அதற்குப் போட்டியாக இன்னொருவன் வந்ததால், இருவரையும் கொன்றுவிட்டதாகவும் பொருத்தமான பொய் சாட்சியுடன் வழக்கை ஜோடித்து, அவ்வேலைக்காரன் உள்பட சாக்ஷி கூறி வழக்கை முடித்து என் தகப்பனாருக்கு மரண தண்டனை கிடைக்கும்படிச் செய்துவிட்டார்கள்.

மது :—ஐயோ! மரணதண்டனையா?

விலா :—ஆம்! மரணதண்டனை. அப்போது எங்கள் குடும்பம்

எப்படித்தான் தத்தளித்திருக்குமென்று சொல்லவேண்டுமா? இந்த விசனத்தில் என் தாயாரும் இறந்துவிடுவார்கள் என்றே நினைத்தோம். பிறகு என் தந்தையின் சிநேகிதர்களின் பெரு முயற்சியால் அப்பீலில் மரணதண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப் பட்டது. "மரணதண்டனையே எனக்கு ஆனந்தமாக விருக்குமே, அதை ஏன் மாற்றினீர்கள்?" என்று என் தந்தை மிகவும் வருத்தப் பட்டார். சிறிது காலம் அந்தமானில் இருந்தார். இப்போது இந்தியாவிலேயே எங்கோ இருக்கிறார்.

மது :—அப்படியென்றால் அவரிருக்குமிடம் உனக்குத் தெரியாதா? கடிதப் போக்குவரத்துகூட கிடையாதா? இத்தனை வருஷங்களாக நீங்கள் ஒருவரையொருவர் பார்க்கவே இல்லையா?

விலா :—ஹூம்! அவைகளெல்லாம் ஓர் கனவு! எனக்கோர் அண்ணன் இருந்ததாகச் சொன்னேனே, என் தந்தை மறைந்த ஏக்கத்தில் அவன் உலகைவிட்டு மறைந்தான். அதர்மத்தைக் கண்டித்து நன்மைக்கு பாடுபட்ட என் தந்தையின் குடும்பம் சின்னபின்னமாகச் சிதறி அல்லகல்லோலப்பட்டது. அந்த வெறுப்பினால் எங்களைப் பார்க்கவும் விரும்பாது மனதை முறித்துக்கொண்டார். ஏனென்றால் நானாவது நன்றாயிருந்தால் போதுமென்பதே அவரது நோக்கம். ஆகையினால் எங்களுடைய க்ஷேமத்தை அவ்வப்போது தம் சிநேகிதர் மூலம் அறிந்து வருகிறார். நானும் என் தாயாரும் அவரை போய்ப் பார்க்கவேண்டுமென்று எத்தனையோ முறை பிரயத்தனம் செய்தோம். என் தந்தை ஒப்புக்கொள்ளவில்லை. தானிருக்கும் ஊரைக்கூட எங்களுக்குத் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

மது :—அப்படியானால், இப்போது உன் தாயார்....

விலா :—என் தாயார் இறந்த செய்தியைக் கேட்டு, "அவளுக்குப்பதில் நான் இறந்திருக்கக்கூடாதா?" என்று 3 நாட்கள் இரவு பகலாய் அலறித் துடித்தாராம். என்னை நன்கு கவனித்துக் கொள்ளும்படியாகத் தன் நண்பர்களிடமெல்லாம் வேண்டினாராம்.

மது :—அப்படி யாராவது வந்து உன்னைக் கவனித்தார்களா விலாஸினீ?

விலா :—வராமலென்ன? எத்தனையோ பேர் வந்து, தம் வீட்டிலேயே வந்து இருக்கும்படியாகக் கூப்பிட்டார்கள். என் தாயாரின் நல்ல உபதேசத்தினாலும், சகவாசத்தின் பயனாலும் இவ்வுலக வியல்பு

ஒரு சிறிது நன்கு தெரிந்திருக்கிறபடியால் அவர்கள் வீட்டில் இருக்க நான் சம்மதிக்கவில்லே. ஆகையால் வரமுடியாதென்று மறுத்துவிட்டேன். சமயத்திற்குக் கடவுள் உங்களுடைய அன்பு நிறைந்த ஆதரவைக் காட்டினுர். அதனுல் என் இதயம் என்னே மீறிய உத்ஸாகத்துடன் திருப்திமயமாக நிறைந்து சந்தோஷ மலராகப் புஷ்பித்தது. அந்த தைரியத்தினுல் இந்த நிமிடம்வரையில் இருக்கின்றேன்—என்று கூறும்போது தாமரை இதழ்கள்போ லுள்ள அவள் கண்களில் நீர்த்துளிகள் பலபலவென்று உதிர்ந்தன.

ஒரு நிமிடம் மதுசூதனனே உற்று நோக்கி, மறு நிமிடம் தலே கீழே சாய்ந்தது. மனத்தை உருக்கும் துக்ககரமான இச்சரித்திரத் தைக் கேட்டதும் மதுசூதனனின் இதயத்தில் ஆயிரம் வாள் கொண்டு அறுப்பது போன்ற சித்திரவதை செய்தது. "என்னே உலகம்! நடந்தது ஒன்று; நாட்டில் மக்களிடம் உலவும் வதந்தி ஒன்று! துராக்ருதம் செய்த மனிதனேப் பிடிக்கப்போன மனிதனின் குடும்பமே அதோகதியாகிவிட்டதே. அடடா! என்ன அநியாயம்! என்ன அக்கிரமம்! இத்தகைய உத்தமரின் புதல்வியையா கொலே காரனின் மகள் என்று என் தந்தை வாய் கூசாது சொன்னுர்! என் தகப்பனுர் சொல்வதை நான் இனி ஒருபோதும் நம்பமாட்டேன். உண்மை தெரியாது உலக வதந்தியை நம்பிப் பேசுகிருர். விலாஸினி ஒருபோதும் கொலேகாரனின் மகள் அல்ல. அவள் மகா பரிசுத்த வதி" என்றெல்லாம் தனக்குள் எண்ணிப் பெருமூச்சுவிட்டான்.

அச்சமயம் இவர்களுடைய இதயத்தைச் சோதிப்பதுபோல், "ப்ரேமை நதியில் பேரின்ப வெள்ளம்" என்ற பாட்டை பக்கத்து வீட்டு கிராமபோன் அலறியது. உடனே மதுசூதனனுக்கு அப் பாடலேப்பற்றிய பழைய சம்பவங்களெல்லாம் நினேவுக்கு வந்து விட்டன. மனம் ஒரு நிலேயில் நிற்காமல் தத்தளித்தது. தன்னேயே தன்னுல் சமாளித்துக்கொள்ளமுடியாமல் மனம் சோர்வுற்றது.

உளுந்த இதயம்

இதைப் படிக்கும்போது உங்கள் இதயமும், மனமும், கண் களும் உங்கள் கட்டுக்கடங்காவென்பது திண்ணம். ஒவ்வொரு வரியிலும் உங்களேப் பரவசமுறச்செய்யும் சக்திவாய்ந்த நாவல் இது.

விலே அணு 4.

23

மனம் ஒரு நிலையில் நிற்காமல் தத்தளித்தது. தன்னையே தன்னால் சமாளித்துக்கொள்ளமுடியாமல் மனம் சோர்வுற்றது. "முரட்டுப் பிடிவாதமாக உண்ணாவிரதமிருக்கும் மனைவியைச் சரிப்படுத்துவதா? விசுவாமித்திரர் கோபத்தைவிட அதிகமான கோபத்துடன் மனைவியையும் இழுத்துக்கொண்டு ஓடிவிட்ட மருமகனை திருப்திசெய்வதா? கொலைகாரனின் மகள்மீது கடும் மோகம் கொண்டு மானஹீனமற்று அலையும் மகனை திருந்தச் செய்வதா? உடன்பிறந்த தம்பி சுடுசரம்போல் வசைமொழிகளைக் கொட்டித் தாக்குவதைச் சகிப்பதா? ஊர் நிந்தனைக்குச் செவி கொடுப்பதா? எதற்குத்தான் ஒரு மனிதனால் ஈடு கொடுக்கமுடியும்?" என்று திருவேங்கடம் தனக்குள் அதிக விசனத்துடன் எண்ணமிட்டுக் கொண்டே அங்குமிங்கும் உலாவினான்.

கைகேயியைப்போல் கோபாவேசத்துடன் படுத்திருக்கும் மனைவியிடம் மறுபடியும் ஓடினான். "ராஜம்! இத்தனைதரம் வேண்டுகிறேனே. உனக்குக் கொஞ்சம்கூட ஈவிரக்கமில்லையா? இத்தனை தினங்களாக இப்படி முழுப் பட்டினியிருந்தால் உயிருக்கே ஆபத்தாகவல்லவோ முடியும்? என்னை நீ எம்மாத்திரம் தூரந்தான் ஆட்டிவைக்கவேண்டுமென விரும்புகிறாய்? எல்லோரும் பொறுமையை இழந்துவிட்டால் நான் ஒருவன் என்னசெய்வது? எதற்கென்றுதான் நான் பாடுபடுவேன்?" என்று சற்று அழுத்தமாகக் கூறிவிட்டான்.

ஏற்கெனவே கோபக்கடலில் மூழ்கிக்கிடக்கும் ராஜம்மாளுக்கு இச் சொற்கள் பொறுக்குமா? கொடிய சர்ப்பம்போலச் சீறியவாறு, "எனக்காக ஒருவரும் ஒரு பாடும்படவேண்டாம்; ஒன்றும் செய்யவேண்டாம். நல்ல ஆத்மாவாகவிருந்தால் என் லக்ஷ்மியைப் பிரிந்த அந்த நிமிடமே என் உயிர் நீங்கி இருக்கும். இன்னும் என்னென்ன அநுபவிக்கவேண்டுமோ, சீர்கெடவேண்டுமோ, அதற்காகத்தான் இந்த பாபாத்மா அல்லாடுகின்றது. நான் பலதாமும் சொன்னேன். மறுபடியும் சொல்கிறேன். நீங்கள் ஒருதரம் சொன்னாலும் சரி; ஒரு ஆயிரந்தரம் சொன்னாலும் சரி; பதினாயிரம் தரம் சொன்னாலும் சரி. என் லக்ஷ்மியும், கிட்டுவும் வந்து என்னுடன்கூட உட்கார்ந்து புசித்தாலொழிய நான் தீர்த்தபானங்

கூடச் செய்யமாட்டேன். இப்படியே என் பிராணன் போகட்டும். பிள்ளைக்கு ஆசைப்பட்டுக் கொள்ளிக்கட்டையை கைநீட்டி வாங்கியதன் பலனை அனுபவித்துச் சாகிறேன். இனிமேல் என்னிடம் வந்து தொந்தரவு செய்யவேண்டியதில்லை" என்று சற்றும் தாக்ஷிண்யமின்றி வெட்டொன்று, துண்டு இரண்டு என்பதுபோலச் சொல்லிவிட்டாள்.

ஐயோ பாவம்! அப்பாவி மனுஷன் என்ன செய்வான்? 'பிடாரிகளைப்போன்று பெண்டைப்படைத்த எல்லோருடைய கதியும் இப்படித்தான்' என்று தனக்குள் எண்ணி ஒரு பெருமூச்செறிந்தான். அப்போதுதான் விலாஸினியின் வீட்டிலிருந்து வந்த மதுசூதனன் இங்கு நடந்த சகல சம்பவங்களையும் கவனித்து உள்ளம் துடித்தான். "என்ன! என்னை கொள்ளிக்குச் சமமாகவா நினைக்கிறாள்!" என்று நினைக்கும்போது தேகமே குபீரென்று எரிவதுபோலத் தோன்றியது. பெற்ற பாசத்தின் வாத்ஸல்யத்திற்கும், ஸ்வீகாரம் வாங்கிக்கொண்ட பாசத்திற்கும் உள்ள வித்தியாசம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெட்டெடன விளங்கியது.

தன்பொருட்டாகத் தன் பிதா படும் அவஸ்தை முற்றும் அவனுக்குத் தெரியாமலில்லை. ஆனாலும், விலாஸினியைப்பற்றி அவர் சொல்லிய வார்த்தைகளின் கடுமை மட்டும் மனத்தைவிட்டு அகலவில்லை. தன் வாழ்க்கைக்கு இன்ப விருக்ஷம்போல் பலவகையிலும் களிப்புறச் செய்யும் புனிதவதியாகிய விலாஸினியைத் துறப்பதா? அல்லது தன் பெற்றோரை இழப்பதா? என்கிற பயங்கரமான கேள்விகள் இதயத்தில் மல்யுத்தம் செய்யத்தொடங்கின. இரண்டையும் நினைக்கும்போது அவனை மீறிய திடுக்கிடலும் சங்கடமும் செய்து வாட்டின. மனம் நிலையிடம் கொள்ளாமல் கூண்டிலடைபட்ட இளஞ்சிங்கம்போல் இப்படியும், அப்படியும் உலாவினான். இவ்வுலகமே ஓர் விபரீத பிம்பமாகத் தோன்றியது.

அதே சமயம் திருவேங்கடம் "சீச்சீ! இந்தப் போராட்டத்தில் இனி என்னால் அரை நிமிடமும் ஈடுகொடுக்கமுடியாது. நாயின் வாலைத் திருப்பினாலும் திருப்பலாம்; இந்த அறிவிலிகளைத் திருப்புவது கடினத்திலும் கடினம். தற்கொலை செய்துகொண்டு சாவதைவிட வேறு வழி கிடையாது. என் தலையில் ஈசன் அப்படித்தான் எழுதியிருக்கிறார் போலிருக்கிறது" என்று சலிப்புடன் உரக்க வாய்விட்டுச் சொன்னான்.

இதைக் கேட்ட மதுசூதனனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. "ஹா! தற்கொலையா! ஐயோ! என்னால் தற்கொலையா? அந்த பயங்கரமான பெரும் பாவத்திற்கு நானா காரண கர்த்தா? ஐயோ! இந்த தர்ம சங்கடத்திற்கு நான் என்ன செய்வேன்? கடவுள் என்னை ஏன் இப்படிச் சோதிக்கவேண்டும்!" என்று தனக்குள் கூறிக்கொண்டே தந்தையின் முன்பு ஓடி, அவர் காலில்விழுந்து கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, "அப்பா! கடவுள்மீது ஆணையாகத் தாங்கள் சற்று முன் சொன்னதுபோலச் செய்யக்கூடாது. அப்படி நீங்கள் செய்வதாயிருந்தால் அதற்கு முன்பே நான் மறைந்துவிடுவேன். வீணாக பயங்கரச் சுழலில் காலை வைக்காதீர்கள். ஆண்டவன் நம்மைப் படைத்தான்; அவனே நம்மை முடித்துக்கொண்டு போவான்"

என்று, பின்னும் பேசுவதற்குள் திருவேங்கடம் கோபத்தையடைந்து, "போதுமடா! உன் கூழைக்கும்பிடு. உன் வேதாந்த வேஷங்கள் எல்லாம் எனக்குத் தெரியும். பசப்பலுக்குப் பயப்படுகிறவன் நானல்ல. இந்த ஜம்பங்களெல்லாம் எதற்கு? இத்தனை நாட்களாகப் பச்சைத் தண்ணீரும் பல்லில் விடாது படுத்திருக்கும் ஆத்மா இருக்கிறதா போயிற்றா என்று நீ எட்டிப் பார்த்தாயா! அவள் செத்தால் சாகட்டும் என்கிற திமிருடன்தானே நீ இன்றும் அந்த கொலைக்காரனின் மகளிடம் குலாவப் போய்விட்டாய். இனி எனக்கு இந்த வீட்டில்—வீடா இது?—இந்த நரகத்தில் என்ன வேலை?" என்று சிம்மம் கர்ஜிப்பதுபோல் கர்ஜித்தான்.

இந்த கடுமையான பாணம்போன்ற வார்த்தைக்கு, பேதை இளவல் என்ன பதில் சொல்வான் பாவம்! ஒன்றுமே தோன்றவில்லை. உடனே ஒரே ஓட்டமாக ராஜம்மாள் படுத்திருக்கும் இடத்திற்கு ஓடினான். "அம்மா! அம்மா! என்னை மன்னித்து விடுங்கள்; தயவுசெய்து எழுந்து சாப்பிட வாருங்கள். உங்கள் காலைப் பிடித்துக்கொள்கிறேன்" என்று கெஞ்சிக் கேட்டான்.

அந்தம்மாளின் மனந்தான் என்ன கல்லோ! இரும்போ! சற்றும் இளகாமல் வெடுவெடுத்தக் குரலில் பேசத்தொடங்கி "போதுமடா! போதும். என் காலைப் பிடித்துக்கொள்ளவேண்டாம். அந்தக் கொலைகாரன் மகளுடைய காலைப் பிடித்துக் கொள்ளடா! என் வயிறு எரிவதுபோல் உன் வயிறு எரிந்தால் நீ என்னை இப்படிச் சதி செய்வதன் கொழுப்பை யறிவாய். எனக்கா

இனி இந்த வீட்டில் சோறு? என் லக்ஷ்மியும் கிட்டுவும் வந்தாலன்றி நான் தலையே தூக்கமாட்டேன். வீண் பசப்பு என்னிடம் வேண்டாம். நீ செய்த குற்றத்திற்காக நீ கிட்டுவின் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டுக்கொண்டு அவனையும் லக்ஷ்மியையும் அழைத்துக் கொண்டு வந்தால் பிறகு பார்க்கலாம். லக்ஷ்மி இல்லாத இந்த மூதேவி வீட்டில் நான் தீர்த்தம்கூடச் சாப்பிடமாட்டேன்" என்று கண்டிப்பாயும் அலக்ஷ்யமும் ஆவேசமும் கலந்து கூறினாள்.

மதுசூதனனின் ரத்தமே கொதிப்பு எடுத்துவிட்டது. அவன் அதற்குமேல் என்னதான் செய்யமுடியும்? தலைவிதியை எண்ணிப் பேசாமல் தன்னறைக்கு வந்து படுத்துக்கொண்டான். அவன் மனத்தில் செய்யும் வேதனையின் போராட்டம் கணக்கு வழக்கில்லை. 'காதலுக்கு அடிமையாவதா, கடமைக்குக் கட்டுப்படுவதா?' என்கிற கேள்வி பலமாக எழுந்து வாதாடியது.

"அநியாயமாய்த் திட்டிப் பழிகூறியதனாலேயே மாசுமருவற்ற விலாஸினியை நான் இழந்துவிட முடியுமா! ஏன் இழக்கவேண்டும்? எதற்காக நான் இழக்கவேண்டும்? நான் என்ன குற்றம் செய்து விட்டேன். அந்த அயோக்கியனின் காலில் நான் ஏன் விழுந்து வணங்கவேண்டும். என்னையும் பழித்து விலாஸினியையும் இழிவு படுத்தி அக்ரமமாகக் கூறிய அந்த அயோக்யசிகாமணிதான் ஏன் என் காலில் விழக்கூடாது?

என்னை ஸ்வீகாரம் செய்துகொண்டதனாலேயே நான் அவர்களுக்கு அடிமையாகிவிட்டேனா! மனிதனுக்குள்ள ஓர் தனி சுதந்திரங்கூடப் பறிமுதல் செய்யப்பட்டுவிட்டதா! என்னுடைய சொந்த காரியங்களை நான் என் மனம்போல் செய்துகொள்வதற்குக்கூட அருகதையற்றக் கட்டை என்றால் எனக்கு இவ்வுலக வாழ்வு எதற்கு?" என்றெல்லாம் ஏதேதோ எண்ணியவாறு குழம்பித் தவித்தான்.

எத்தனைதான் சமாதானப்படுத்தியும் ஒரு வழிக்கும் மனது துணியவில்லை. பட்டினிகிடந்து எங்கே ராஜம்மாளின் உயிர் போய் விடுமோ! என்கிற பயமும் ஒருபுறம் போராடுகிறது. என்னதான் செய்வது? கொடிய நரகம்போல் இரவு நேரம் கழிந்தது.

மீண்டும் எழுந்தால் ஏதேனும் மனச்சாந்தி உண்டா! அதிகாலையில் தன் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு டாக்டர் வீட்டிற்குவந்தான். அன்று வழக்கத்திற்கு விரோதமாய் டாக்டரும் அவ

ருடைய மனைவியும் முன் கட்டு ஹாலிலேயே உட்கார்ந்திருந்ததைப் பார்த்ததும் ஆச்சரியத்தால் திடுக்கிட்டுச் சற்று அசந்துநின்றான்.

டாக்டர் இவனது வியப்பைக் கண்டு நகைத்தவாறு, "பயப் படாதே! மதுசூதனா! உன் பேட்டிக்காகவே நாங்கள் காத்திருக் கிறோம். இப்படி உட்காரு. உன்னிடம் நான் சில விஷயங்கள் பேசவேண்டும். உன் வீட்டு சம்பவங்கள் முற்றும் நான் அறிந் தேன். எது எப்படியிருப்பினும் நீயும் இம்மாதிரி மூர்க்கத்தன மான பிடிவாதம் செய்யக்கூடாது.

நேற்று உன் தகப்பனார் கதறுகதறென்று கதறிக் கண்ணீர் வடித்தார். ஒரு பெண்மணி இத்தனை நாள் பட்டினிகிடப்பதென் றால் அதன் பயங்கரம் உன்னையல்லவா பாதிக்கும்? நேற்றுப் பகல் என்னை அழைத்துச் சென்றார்கள். நான்போய் பார்த்துப் பயந்து விட்டேன். குடல் சுருங்கி ரணமாகிவிட்டால் ஆளே க்ளோஸாகி விடுவாளே! அதோடு, எத்தனையோ ஆசையாய் உன்னைக் கையேந்தி வாங்கியவர்களுக்கு உன்னால் சுகமோ, க்ஷேமமோ இல்லாவிட் டால் அவர்கள் மனம் த்ருப்தியடையுமா! உன்னால் பெரும் மகிழ்ச்சி யடையவேண்டுமென்றல்லவா அவர்கள் பாடுபடுகிறார்கள்? இவை களை நீ கவனிக்கவேண்டாமா! என்மேல் கோபித்துக்கொள்ளாதே.

மதுசூதனா! இதென்ன அழுகை? நீ ஒரு ஆண் சிங்கமல்லவா! எத்தகைய கஷ்டத்தையும் ஜெயித்து முன்வரவேண்டாமா? என்ன இருப்பினும் நீ உன் மனம்போன போக்கின்படி அந்தப் பெண் ணிடம் நேசம்வைத்திருப்பது கொஞ்சமும் நன்றாகவே இல்லை. உன் பெற்றோர்களின் அந்தஸ்தை நீ கவனிக்கவேண்டாமா! அதைச் சொன்னால் காதல் என்று கூறுவாய். காதலாவது கத்திரிக்காயா வது என்றுதான் நான் சொல்வேன். இந்த வீண் பிரமையை விட்டுவிடு. உன்னை நம்பியிருப்பவர்களுக்கு நீ சந்தோஷத்தை உண் டாக்கு. அதுதான் உனது கடமை" என்று ஒரு குட்டிப் பிரஸங்கம் செய்தார்.

உடனே அடுத்த பிரஸங்கி ஆரம்பிப்பதுபோல் டாக்டரின் மனைவி பேசத்துடங்கி "அப்பா! மதுசூதனா! உரலுக்கு ஒரு பக்கம் இடி; மத்தளத்திற்கு இருபக்கமும் இடி என்பதுபோல் உனக்கு பெற்றோரிடமும் வளர்த்தோரிடமும் சேர்ந்து மத்தளத்தைப்போல் இடி என்பதை மறந்துவிட்டாயே! இந்த அற்ப விஷயத்திற்காக இத்தனை பெரிய சண்டையும், உண்ணாவிரதமும், ஊர்சிரிப்பும்

சுத்தமாக நன்றாயில்லை.

நாவல்களில் வருவதுபோல் உன் வாழ்க்கையிலும் நடக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறாயா! என்ன காதல் வேண்டியிருக்கு? எங்க மருமகன்கூட முதலில் ஒரு பெண்ணை நேசித்து அதையே மணப்பேனென்று பிடிவாதம் செய்தானும்...அவளைவிட அழகாயும் செல்வச் சீமாட்டியாயும் இருக்கும் எங்கள் பெண்ணைப் பார்த்ததும் முன்பு சொல்லிய காதல் கீரைத்தண்டாகப் போய்விட்டது. என் மகளைத் தவிர வேறு பெண்ணைக் கண்ணாலும் பார்க்கமாட்டேன் என்று கூறி மணந்துகொண்டான். இப்போது சவுக்யமாயிருப்பதோடு வெகு சந்தோஷமாயும் ஒற்றுமையாயும் இருக்கிறார்கள். முன்பு நேசித்த பெண்ணை இப்போது கனவிலும் நினைப்பதில்லை. இதெல்லாம் வெறும் பாசிபோன்ற ஆசையாகும். இதற்கு மயங்கி இத்தனை மக்களையும் விரோதித்துக்கொள்வது தர்மமா அல்லது அழகாயிருக்கிறதா! கொஞ்சமும் நன்றாக இல்லை. நீ புத்திசாலியாதலாலும் இந்த டாக்டரிடம் இத்தனை வருஷமாகப் பழகியதாலும் நீ இம்மாதிரி முரட்டுத்தனம் செய்யக்கூடாது. உன்னைக் கையேந்தி வாங்கிய தாயை நீ பூஜிப்பதைவிட்டுச் சாகவடிப்பது கொடும் பாவமாகும்.

நாங்கள் பெரியவர்களாதலால் உனக்குத் தைரியமாய் புத்தி சொல்லுகிறோம். நீ உடனே வீட்டிற்குப்போய் உன் தாயை மகிழ்வித்து முதலில் சாப்பிடச் செய்து பின் அவளையும் அழைத்துச் சென்று கிட்டுவையும் லக்ஷ்மியையும் சமாதானஞ்செய்து வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வா! பிறகு எல்லாம் சரியாகிவிடும். என்ன சொல்கிறாய்?...நாங்கள் இத்தனைநேரம் வாய்ஓயாது மெஷின் போல் பேசிக்கொண்டே போகிறோம்; நீ வாயையே திறக்காது மௌனம் சாதிக்கிறாயே! அதன் அர்த்தமென்னப்பா! எனக்கு விளங்கவில்லையே?'' என்று சொல்வதை யெல்லாம் சொல்லிவிட்டுக் கடைசியில் ஒரு குத்தல் வார்த்தையையும் கூறினாள்.

பாக்குவெட்டியிலகப்பட்டப் பாக்கைப்போல் தத்தளிக்கும் மதுசூதனனின் உள்ளம் அலைகாற்றிலலையும் துரும்பைப்போல் தத்தளிக்கையில் அவன் என்னவிதமான பதிலைத்தான் சொல்வான் பாவம்! நெஞ்சிலோ வேதனையும் குழப்பமும் அலைமோதுகிறது. அந்த வேகத்தில் வாயடைத்துவிட்டது. கண்ணீர் அவனை மிஞ்சி பொங்கிப் பொங்கி வருவதை எத்தனை சமாளித்தும் முடியவில்லை.

பதில் என்ன சொல்வதென்றும் தோன்றவில்லை. தன்னிடம் வேலையிலிருக்கும் மனுஷ்யனை மதித்து இருவரும் இதம் பேசுவதைக் கேட்கும்போது, தான் செய்வது பெரும் குற்றந்தான் என்று தோன்றுகின்றது.

அடுத்த நிமிடமே, காதலைப்பற்றி அந்தம்மாள் பேசும்போது 'அந்த முட்டாள் மனிதனைப்போல் நானும் பச்சோந்திபோல் மாறக் கூடிய அடிமுட்டாளா! என்னிதயத்தில் வேரூன்றி முதன்மை ஸ்தானம் வகிக்கும் இன்பக் கிளியை மறப்பதும், இன்னொரு புலி யைக் கொள்வதும் என் மனம் ஒருபோதும் நாடாது. அப்படியும் என் தலையெழுத்து இருக்குமாயின் விதி விட்ட வழி நடக்கட்டும்'' என்று தனக்குள் பலமாக எண்ணமிட்டானேயன்றி வெளியில் சொல்லத்துணியவில்லை.

அந்தம்மாள் கேட்டபிறகும் மௌனம் சாதிப்பது அவமதிப்ப தற்கொப்பாகும் என்று எண்ணி அவர்களை நமஸ்கரித்து, "டாக்டர்! அம்மணி! என்னை மன்னித்துவிடுங்கள். நான் உங்கள் குழந்தை. எனக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை...உண்மையில் விலாஸினியை நான் நேசிப்பது கடவுள்மீது ஆணையானதாகும். அதை மறக்கவோ, மாற்றவோ இந்த ஜென்மத்தில் முடியாது. பிரேமை நதியில் பிணைக்கப்பட்ட கப்பல்போல் எங்களிருவருடைய உள்ளமும் பிணைக்கப்பட்டுவிட்டது. அது பகவானுக்கு விபரீத மாகத் தோன்றினால் அவனிடும் தண்டனைக்கு நான் சிரங்கொடுத்து வகிக்கக் காத்திருக்கிறேன்."

என்று பின்னும் ஏதோ சொல்லிமுடிப்பதற்குள் டாக்டர் பேசத் தொடங்கி, "மதுசூதனா! பிரேமையும், நேசமும் உன் னுடைய அந்தராத்மாவைச் சேர்ந்தவை. இதைப் பிறர் ஒப்புக்கொள் வதுதான் உலக வியல்பில் ஒருபோதும் முடியாது. அதற்குப் பல மான எதிர்ப்பு கிடைப்பது சகஜமேயன்றி, ஆதரவு கிடைப்பது சூன்யந்தான். ஆகையால், அதை நீ மறந்துவிட்டு உன்னை நம்பி யுள்ள பெற்றோரின் துயராற்றிக் களிக்கச்செய்வதுதான் உனது கடமையும் தருமமும் ஆகும்.

வேண்டுமானால் ஒன்று செய். உனக்கு உபதேசம் செய்த குரு (சன்யாசி) இப்போது இந்த ஊருக்கு இன்று வரப்போகிறார். நித்தியானந்தர் என்கிற ஸ்வாமிகளின் அதிதியாய் வருகிறாராம். அவரிடம் சென்று உன்னுடைய குழம்பிய மனத்திற்குத் தெளி

வான உபதேசம் பெற்றுக்கொண்டு அதன்பிறகு ஒரு முடிவுக்கு வா! இம்மாதிரி வீண் அபவாதத்திற்கு இடம் கொடுத்து ஊர் சிரிக்கச் செய்யாதே" என்றார்.

அந்த ஸ்வாமிகள் வரப்போகிறார் என்கிறதைக் கேட்டதும் மதுசூதனின் உள்ளத்தில் ஓர் ஒளி சடக்கென்று பிரகாசித்தது. இதுகாறும் இருந்த நிலைமைக்கும் அந்த நிமிஷத்திலுண்டாகிய நிலைமைக்கும் அஜகஜேந்திரமான வித்தியாஸத்தை அவன் முகம் காட்டியது.

உடனே பரபரப்புடன், "உண்மையில் ஸ்வாமிகளா வரப் போகிறார்? நிஜமாகவா?...டாக்டர்! தயவு செய்து எனக்கு இன்று மட்டும் லீவு கொடுத்துவிட்டால் போதும். நாளை நான் தீர்மான மான பதில் சொல்லிவிடுவேன். என்னை மன்னிக்கவும், நான் போய்வருகிறேன். நமஸ்காரம்" என்று கூறிவிட்டுப் பதிலையும் எதிர் பார்க்காது ஓட்டமாக ஓடிவிட்டான்.

கூண்டிலடைபட்டுக் கிடந்த பறவை பறந்து ஓடுவதுபோல் மதுசூதனன் ஓடியது, தம்பதிகளுக்கு ஆச்சரியமாயும் ஆனந்தக் காக்ஷியாயும் இருந்தது. 'என்ன பதில் கிடைக்குமோ! என்ன வாகுமோ!' என்ற எதிர்பார்ப்பு அப்போதே நெஞ்சில் வேலை செய்யத் தொடங்கியது.

மகிழ்ச்சி உதயம்

('உளுத்த இதய'த்தின் தொடர்ச்சி)

தாய்! தந்தை! தாரம்!

இவர்களுக்குரிய கடமைகளைச் செய்வது மேலானதா?
தான் செய்த பாவத்திற்குப் பிராயச்சித்தம் செய்வது மேலானதா?

அகக் கதவா? ஆலயக் கதவா?

தற்காலம் நம் தென்னிந்தியாவில் எங்கு பார்த்தாலும் ஹரிஜனங்களின் ஆலயப்பிரவேச விஷயமான வார்த்தைகளே சப்திக்கின்றன. ஹரிஜனங்களுக்காகத் தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தஞ்செய்துழைக்கும் சதிபதிகளின் அபரிமிதமான அன்பின் பெருக்கைப்பற்றி, வெகு எளிய முறையில் தெளிவாக எழுதியுள்ள நாவல். இரண்டாம் பதிப்பு அணா பத்து.

சந்தாநேயர்களுக்கு **அணா எட்டு.**

24

"என்ன பதில் கிடைக்குமோ! என்ன ஆகுமோ?" என்கிற எதிர்பார்ப்பு அப்போதே நெஞ்சில் வேலை செய்யத் தொடங்கியது. 'போகலாமா? வேண்டாமா?' என்று சற்றுத் தயங்கினன். 'இனிமேல் இப்படி மீனம் மேஷம் பார்த்தால் முடியாது; ஆகையால் போய்க்கேட்டே தீருவது' என்று திருவேங்கடம் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டே விலாஸினியின் வீட்டிற்கு வந்தான்.

"முன்பின் அறியாத புதிய மனிதன் திடீரென்று வந்து நின்ருல் அந்தப் பெண் என்ன நினைப்பாளோ?" என்று ஒரு க்ஷணம் தோன்றியது. மறுக்கணமே, "நினைப்பதென்ன விருக்கிறது? மிஞ்சிப்போவதற்கு முன்பு என் காரியத்தை நான் முடிப்பதுதானே தருமம்" என்று மீண்டும் தைரியஞ் செய்துகொண்டு உள்ளே சென்ருன்.

விலாஸினி துவண்டுபோய், வாடிய ரோஜா மலரைப்போல் காணப்பட்டாளெனினும் அவள் யாழினுமினிய குரலில்,

பேயா யுழலுஞ் சிறுமனமே
    பேணு யென் சொல் இன்று முதல்
நீயா யொன்றும் நாடாதே
    நினது தலைவன் யானே காண்
தாயாம் சக்தி தாளினிலும்
    தரும மெனயான் குறிப்பதிலும்
ஓயாதே நின்றுழைத்திடுவாய்
    உரைத்தேன் அடங்கி உய்யுதியால்.

என்கிற அதியற்புதமான பாரதியார் பாட்டைப் பாடிக்கொண்டிருந்தாள். அப்பாடலின் அபாரமான அர்த்தம் திருவேங்கடத்தின் மனத்தையே சடக்கென்று மாற்றி உலுக்கியது. 'ஐயோ! அதிர்ஷ்டஹீனப்பெண்ணே! இத்தனை அழகாகப்பாடும் சக்தி கூட உனக்கு இருக்கிறதா? உம்...இத்தகைய வனமோகினியைக் கண்டு இளங்காளை மையல்கொண்டதில் வியப்பென்ன இருக்கிறது! உம்...விதி! விதி!" என்று நினைத்தபடியே வாசற்படியருகிலேயே நின்று "யாரம்மா உள்ளே?" என்று கூவினன்.

தன்போக்காக, பித்துபிடித்தவள்போல் தலையும் வேஷமுமாகப் பாடிக்கொண்டிருந்த விலாஸினி, யார் குரலோ கேட்பதைக் கேட்டு

திடுக்கிட்டவாறு எழுந்து தலையைக் கோதி ஆடையை சீர்படுத்திக் கொண்டு கதவருகில் வந்து எட்டிப் பார்த்தாள்.

அவ்வளவுதான்; திருவேங்கடம் யாரென்று தெரிந்துவிட்டதால் அபாரமான சந்தோஷமும், பூரிப்புங்கொண்டு நகைத்தபடியே "வாருங்கள்; வாருங்கள்: இப்படி உட்காருங்கள்" என்று மரியாதையுடன் உபசரித்து நாற்காலியைக் காட்டினுள். தன் காதலனின் தகப்பனுர் முகத்தைப் பார்க்கும்போதே அவனையே பார்க்கும் பேரானந்தத்தை யடைந்து ஒருக்ஷண நேரத்தில் மெய் மறந்தாள்.

உலகவிவகாரங்களை நன்ருக அறிந்திருந்த திருவேங்கடத்திற்கு உண்மையில் விலாஸினியைப் பார்த்ததும் பரிதாபம் தேங்கியது. "ஐயோ பாவம்! என்னைக் காணும்போதே எவ்வளவு பூரிப்பு, எத்தனை எதிர்பார்ப்பு! எவ்வளவு சந்தோஷம். அடாடா! உம்... மாயா உலகத்தின் விநோதம். அவளுக்கு நான் அனுகூலனய் வந்திருப்பதாய் எண்ணி இத்தனைப் பூரிக்கிருள் பாவம்! காலக் கூத்து!" என்று தனக்குள் நினைத்துப் பெருமூச்சு விட்டபடியே உட்கார்ந்தான்.

திரு:—நீயும் இப்படி உட்காரம்மா! நான் யாரென்று தெரியுமா!

விலா:—ஓ! ரொம்ப நன்ருகத் தெரியும். அவருக்குத் தகப்பனுர் என்ருல் எனக்கும் தகப்பனுர்போன்றவர்களல்லவா!

இதைக்கேட்ட திருவேங்கடத்தின் மெய் சிலிர்த்தது. "என்ன ஆழமானதும், ஆணித்திறமானதுமான அன்பும், நம்பிக்கையும் ஊன்றி இருக்கின்றன?...ஐயோ! சோதனையே!" என்று உள்ளுக்குள் நினைத்தான். அந்த நினைப்பின் உணர்ச்சியில் அவன் முகத்தில் ஒருவிதமான மாறுதலும் விசனமும் ததும்பின.

இதற்குள் விலாஸினி உள்ளே ஓடிப்போய் ஒரு கோப்பை நிறைய எலுமிச்சம்பழ ஷர்பத்து அப்போதே ஒரு நொடியில் செய்துகொண்டு வந்து, அவனிடம் நீட்டி, "இதை தயவு செய்து சாப்பிடவேண்டும்" என்று பணிவாயும், அவள் மனத்தை மீறிய அன்புடனும் கூறினுள்.

திருவேங்கடத்தின் கண்களில் ஜலம் தளும்பிவிட்டது. "அம்மணீ! உன்னுடைய இந்த பரிசுத்தமான அன்புக்கு நான் பாத்திரமில்லையம்மா! என்னை நீ உனது மித்திரனுக எண்ணியிருக்கிருய்; ஆனுல், உண்மையில் நான் உனக்குச் சத்துரு என்பதில் சந்தேகமே

யில்லை. உன்னிடம் தித்திப்பாக நான் சாப்பிட்டுவிட்டு உனக்குத் துரோகம் செய்வது அழகல்ல. ஆகையால், இது வேண்டாம்மா! வித்தியாஸமாக நினைக்காதே. நான் உன்னிடம் ஓர் முக்கியமான காரியமாய் வந்திருக்கிறேன். அந்த காரியத்திற்கு ஜெயம் கிடைத்து விட்டால் போதும்" என்று பெரிய பீடிகையுடன் ஆரம்பித்தான்.

இவனுடைய வார்த்தை முற்றும் விலாஸினிக்குப் பெருங்குழப்பத்தையும், விசனத்தையும் அளித்ததால், அவள் மனம் சோர்வுற்று வாடியது. ஒன்றுமே தோன்றாத நிலையில் அவள் கையிலிருந்த கோப்பை அப்படியே கீழே விழுந்து உருண்டு ஓடியது. "எனக்கு நீங்கள் சத்ருவா?...எனக்குத் துரோகம் செய்வதா?...என்னால் காரியமா?...எனக்கொன்றுமே விளங்கவில்லையே! ஐயா! ஏழை என்னை சோதிக்கவேண்டாம்...தயவுசெய்து விளங்கச் சொல்லுங்கள்" என்று கூறும்போது நாக்கு தழதழத்துக் குரல் கம்மிக் கண்ணீர் உதிர்ந்துவிட்டது.

திருவேங்கடம் தைரியமாக வந்துவிட்டானேயன்றி மனம் தத்தளிக்கின்றது. அந்த பேதைப் பெண்ணின் பரிதாபமும், பரதேசித்தனத்தின் கண்ணீரும் உள்ளத்தை உருக்கின. தடை கட்டமுடியாது பெருமூச்சுக்கள் துரத்தின. "சீச்சீ! என்ன கொடுமை செய்யவந்திருக்கிறோம்?...பாழும் கொலை ஒன்று இல்லாதிருக்குமாயின் இத்தனை தொல்லை இல்லையல்லவா"...என்று நினைத்தபடியே சற்று சமாளித்துக்கொண்டு, "விலாஸினி! நீ பகவத் கீதையைப் படித்திருக்கிறாயாம்மா" என்று விடுகதையைப்போல் கேட்டான்.

விலாஸினி திடுக்கிட்டாள். எனினும், தைரியத்தை விடாது, "ஒரு முறைக்கு 5 முறை படித்திருக்கிறேன்" என்று மட்டும் பதில் சொன்னாள்.

திரு :—கீதையின் முக்கிய ஸாரத்தை நீ நன்கறிவாயாம்மா?

விலா :—திவ்யமாயறிவேன். ஸர்வம் பகவானின் செயல் என்றும், அவன் இட்ட கட்டளைப்படி மனிதன் பிரதிபலனைக் கோராது தனது கடமையைச் செய்யவேண்டுமென்றும், அநவரதமும் பகவானை நம்பிப் பஜிக்க வேண்டுமென்றும் கூறியிருக்கிறது.

திரு :—அப்படியானால் கடமை என்பது ஒவ்வொரு மனிதருக்கும் அதி அவசியமானதல்லவா?

விலா :—கட்டாயம் அவசியமானதுதான்.

18304 6

திரு :—விலாஸினீ ! ஒவ்வொரு மனிதரும் தம் தம் கடமைப்படி நடக்கவேண்டிய தர்மத்தில் நீ உன் கடமைப்படி நடக்கவேண்டாமா ? அதைத்தான் நினைப்பூட்டவந்தேன்.... நீ உன் கடமையில் தவறினால் உன்னைச் சார்ந்தவர்களும் கடமையைக் கைவிட நேருகிறதல்லவா ?

விலா :—(தீயை மிதித்தவள்போல் துள்ளி)...நானா என் கடமையில் பிசகினேன். எனக்கொன்றும் புரியவில்லையே...அப்படிப் பிசகியதாக...

திரு :—பொறு; பொறு. ஆத்திரப்படாதேம்மா ! உன்னுடைய விரலுக்குமேல் வீக்கம் கண்டால் விரல் தாங்குமா ! அதுபோல் நீ உனது நிலைமைக்கு மீறி நேசம் வைத்தது சரியா.... உன் தகப்பனார் ஓர் கொலைகாரன் என்கிற இழுக்கை மறந்துவிட்டாயே...

இதற்குமேல் அவளால் தாளமுடியவில்லை. இரு காதுகளையும் பொத்திக்கொண்டு "ஹா ! கடவுளே !....கடவுளே !..." என்று கதறியவாறு சாய்ந்துவிட்டாள். அவளுடைய நிலைமையைக் கண்டதும் திருவேங்கடமே திடுக்கிட்டுவிட்டான்...

சில விநாடிகள் இருவருக்கும் இடையில் மௌனம் குடிகொண்டது. மீண்டும் சற்றுத் தேறியவளாய் பேசத் தொடங்கி, "ஐயா! இப்போது வெகு தெளிவாய் விளங்கிவிட்டது. வீணாக என் தகப்பனாரைப் பழித்துக் கூறவேண்டாம். சோதனையும், விதியும் ஒன்றுகூடும் வேளையில், நிரபராதிகளைக் குற்றவாளிகளாக்கி மங்கச் செய்வது கலிகாலத்தின் கோலம். அதற்கும், கடவுளின் அபூர்வ சக்தியின் பிரஸாதமாய் மனத்திலிருந்து உத்பவிக்கும் பிரேமைக்கும் என்ன சம்மந்தம் ?...அது ஒரு குறிப்பிட்டவர்களிடம் உண்டாகும்; மற்றவையோரிடம் சூனியம் என்று பகவான் வைக்கவில்லையே...

திரு :—(இடை மறுத்து) குழந்தாய் ! நீ நல்ல விவேகி. உன்னிடம் நான் விதண்டாவாதம் செய்யவோ, குதர்க்கம்பண்ணவோ வரவில்லையம்மா ! 'உலகத்தோடொத்து வாழ்' என்பது பழமொழி. என் குடும்பத்தின் வரலாறு முற்றும் உனக்குத் தெரிந்திருக்கலாம். எங்கள் குடும்பத்தின் விளக்கை ஏற்றிவைக்க நீதான் தயவு செய்ய வேண்டும். என் மகன் அவன் கடமையைச் செய்யும்படி நீ நடந்து கொண்டு அவனால் எங்களுக்கு மகிழ்ச்சிமயமான சந்தோஷமலர் போன்ற களிப்பைக் கொடுக்கவேண்டும்.

அம்மா ! விலாஸினீ ! உன் சந்தோஷத்தைக் குலைக்கும்படி நான்

பேசுவது உனக்கு அபாரமான கோபத்தையும், துக்கத்தையும் கொடுக்கலாம். அதற்குக் காரணம் விதியே யன்றி நானல்ல. விலாஸினீ! நான் பெரியவனுக இருப்பினும் உன்னிடம் மன்னிப்புக் கோருகிறேன். கோபிக்காதே! மதுசூதனனை நீ உயிருக்கு உயிராய் நேசிப்பது உண்மையாகவிருப்பின் அவனுடைய க்ஷேமத்தையும், அவனது குடும்ப க்ஷேமத்தையும் நீ கட்டாயம் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிருயல்லவா? மதுசூதனனை நீ காக்கக்கூடியவளானுல் அவனை நீ உன் உடன்பிறந்த அண்ணனைப்போல் பாவித்து பழய அன்பை மறந்து மாற்றிக்கொள்ளவேண்டும். இதைக் கேட்கத்தான் நான் உன்னிடம் வந்தேன். எங்கள் குடும்பத்தின் கௌரவத்தை நீ காக்கவேண்டும்'' என்று கூறினர்.

விலாஸினியின் உயிர் கூட்டிலிருக்கிறதா பறந்து போய்விட்டதா! என்று ஐயுறும்படியாய்த் துவண்டுபோய் சாய்ந்துவிட்டாள். வெயர்வை வெள்ளமாகப் பொங்கி ஓடுகிறது. கண்களை மூடிக்கொண்டு 5 நிமிடநேரம் ஸ்மரணையற்றுக் கிடந்தாள். அவளுடைய நிலைமையைப் பார்த்து திருவேங்கடத்திற்கே பயமாயும், விசனமாயும் போய்விட்டது.

சற்று தெளிவு பெற்றுக் கண்ணைவிழித்த விலாஸினி திருவேங்கடத்தை ஒரு பார்வை பார்த்தாள். "ஆஹா! அந்தப் பார்வையில் ப்ரகாசித்த ஜோதியின் ஒளியைக் கண்டு திருவேங்கடம் ப்ரமித்துப் போய்விட்டான்...மனத்தை முறித்து எப்படியோ ஒரு அபூர்வமான தீர வைராக்கியத்தை அந்தக்ஷணமே முகத்தில் ஜ்வலிக்கச் செய்துக் கண்ணுல் வீசினுள்.

இதுகாறும் குழம்பிய உள்ளத்திற்கு இத்தனை சடுதியில் இத்தகைய வைராக்கியச் சுடர் எப்படித்தான் உண்டாகியது என்று அவளால்கூட நினைக்க முடியவில்லை. தலையைக் கோதிக்கொண்டு வெகு பரபரப்புடன் எழுந்து திருவேங்கடத்தை நமஸ்காரம் செய்தாள். ஒரு வீரச் சிரிப்பு சிரித்தவாறு. "ஐயா! என்மீது நம்பிக்கை உண்டாவதற்காக நான் உங்கள் மீதே ஆணையிட்டுப் பேசுகிறேன். இனி நான் அவர் பார்க்கும்படிக்குக்கூட அகப்படமாட்டேன். நீங்கள் சந்தோஷமாய் குடும்ப வளர்ச்சிக்கான முயற்சியுடன் மகனுக்கு விவாகத்தைச் செய்து இன்புறுங்கள். இது சத்தியம். நான் அதற்குத் தடையாக இருக்கிறேன் என்பதை யறியாது இதுவரையில் மூடத்தனமாக நடந்துகொண்டு உங்கள் மனத்தை

நோகச் செய்துவிட்டேன்.

விஷயம் தெரிந்தபிறகு இனி அரை வினாடிகூட என்னால் ஒரு விதமான தடங்கலும் நேராமல் நான் நடந்துகொள்கிறேன். என்னை நம்புங்கள். நமஸ்காரம், போய்வாருங்கள்" என்று முன் கூட்டி விடையும் கொடுத்துக் கூறினாள்.

என்னே ஆச்சரியம்! திருவேங்கடத்திற்கு உண்மையில் ஒன்றுமே தோன்றாது கண்ணீர் மடமடவென்று வந்துவிட்டது. அதை யடக்கிக்கொண்டு 'விலாஸினீ!'...என்று கூப்பிட்டான். அதற்குள் விலாஸினி தைரியமாயும், சிரித்த வண்ணமும் பேசத் தொடங்கி, "தாங்கள் கூப்பிடுவதன் கருத்து எனக்குத் தெரியும். மகா பாவத்தைச் செய்து பிறந்துவிட்ட இக் கட்டைக்கு எவ்வித மான உபசார வார்த்தைகளும் வேண்டாம். நான் முதலில் சொல் லியதுபோல் என் கடமையை நான் செய்துவிட்டேன். இனி என் சவத்தினாலுங்கூட உங்களுக்குத் தடங்கலோ ஆபத்தோ நேராது என்பது கடவுள்மீது ஆணையாகச் சொல்கிறேன். நம்பிக்கையுடன் போய்வாருங்கள்" என்று கூறிவிட்டு சடக்கென்று எழுந்து போய்விட்டாள்.

அதற்குமேல் திருவேங்கடத்திற்கு ஒன்றுமே தோன்றாது பிரமை பிடித்ததுபோலாய்விட்டது. விலாஸினியும் எழுந்துபோன பிறகு அங்கு என்ன செய்யமுடியும்? கண்ணைத் துடைத்துக் கொண்டே எழுந்து போய்விட்டான். தாமரையிலை நீர்த்துளியைப் போல் மனம் தத்தளித்தது. சாந்தி இழந்த நெஞ்சுடனும் படபடத்த இதயத்துடனும் நடந்தான்.

பத்மகுமார்

விலை அணா 8.
சந்தாநேயர்களுக்கு
அணா 6.

படிக்குந்தோறும் உங்களை முற்றிலும் வயிறு குலுங்கச் சிரிக்க வைத்துச் சந்தோஷத்தை யளிக்கக் கூடிய ஹாஸ்ய ரஸப் பிரதானத் துடன், பல அருமையான விஷயங்களைக் கொண்ட புதிய நவீனம்.

25

தாமரையிலை நீர்த்துளியைப்போல் மனம் தத்தளித்தது. சாந்தி இழந்த நெஞ்சுடனும், படபடத்த இதயத்துடனும் நடந்தான். கால்கள் பின்னவிடுகின்றன. தேகம் காற்றில் ஆடி விழுந்து விடும்போல் பறக்கிறது. "இத்தனை சங்கடங்களும் உண்டாவதற்காகவா பகவான் அந்தப் பொற்கொடியை எனக்குக் காட்டி என் மனத்தைப் பரிசோதித்து அலைய வைத்தார்? ஐயோ! விலாஸினியை மறப்பதா?...அது முடியுமா?....அக்காரியம் இந்த ஜென்மாவில் வருமென்று நான் நினைத்தேனா? எப்படித்தான் நான் விலாஸினியின் சந்திரபிம்பம்போன்ற முகத்தை மறக்கமுடியும்!" என்று மதுசூதனன் நினைக்கும்போது உள்ளம் உருகியது.

டாக்டரிடமிருந்து ஓட்டமாக ஓடியவன் பித்தன்போல் அப்படியும், இப்படியும் அலைந்தான். எப்போது ஸ்வாமிகளைப் பார்க்கலாம் என்ற வெறி பிடித்துவிட்டது.

வீட்டிற்கும் போகத் துணியவில்லை. பித்தன்போல் அலைந்து பொழுதைப் போக்கிவிட்டான். "ஸ்வாமிகளைப் பார்த்தால் அவர் என்ன சொல்லுவாரோ! முன்பு நானிருந்த நிலைமையைக் குத்திக் காட்டிப் பரிகஸிப்பாரோ!...உம். பரிகாஸமாவது, பருத்திக் கொட்டையாவது?"...என்று தானே சமாதானமும் செய்து கொண்டான்.

"ஸ்வாமிகள் ஒரு வேளை என் விருப்பத்திற்கு விரோதமாகச் சொல்லிவிட்டால் நான் பிறகு விலாஸினியை எப்படிப் பார்க்க முடியும்? ஆகையால் அதற்கு முன்பு அவளை மற்றொரு முறை என் கண்ணாரக்கண்டு ஆனந்தித்துப் பரவசமடைகிறேன்" என்று ஓர் முடிவு செய்துகொண்டு, மேற்கூறியபடி விலாஸினியின் வீட்டிற்குச் சென்றான்.

"இத்தனை நாட்கள் சென்றபோது இருந்த உத்ஸாகமும், ஆனந்தமும், இன்று எங்கே மறைந்தது? ஏன் இப்படி என் மனது பதைக்கவேண்டும். இதயம் ஏன் துடிக்கவேண்டும்? ஒரு வேளை என்னுவிக் கமுதம்போன்ற விலாஸினியை இழந்துவிடுவேனோ?" என்று நினைக்கும்போது உலகமே தலைகீழாய்ச் சுற்றியதுபோலாகி விட்டது.

சற்று சமாளித்துக்கொண்டு வீட்டிற்குள் சென்றான். தினம்

மங்களகரமாய் விளக்கு எரிந்துகொண்டிருக்கும் விலாஸினியின் விடுதியில் அந்தகாரம் குடிபுகுந்திருந்ததை தூரத்திலிருந்து கண்டு திடுக்கிட்டான். "ஒருகால் விலாஸினி இல்லையா! எங்கு போயிருப்பாள்? உள்ளே சென்று பார்த்தால் தெரிகிறது" என்று திடம் செய்தவாறே உள் வாசற்படியருகில் வந்தான். இதயத்துடிப்பு முன்னிலும் அதிகரித்து ஓடுகிறது. கதவு சாத்தப்பட்டிருந்தது. இருப்பினும் விம்மிவிம்மி யழும் குரலில்,

1. மோகத்தைக் கொன்று விடு—அல்லா லென்றன்
மூச்சை நிறுத்தி விடு
தேகத்தைச் சாய்த்து விடு—அல்லா லதில்
சிந்தனை மாய்த்து விடு
யோகத் திருத்திவிடு—அல்லா லென்றன்
ஊனைச் சிதைத்து விடு
ஏகத் திருந்து லகம்—இங்குள்ளன
யாவையும் செய்பவளே!

2. பந்தத்தை நீக்கி விடு—அல்லா லுயிர்ப்
பாரத்தைப் போக்கி விடு
சிந்தை தெளிவாக்கு—அல்லா லிதைச்
செத்த வுட லாக்கு
இந்தப் பதர்களையே—நெல்லாமென
எண்ணி இருப்பேனோ
எந்தப் பொருளிலுமே—உள்ளே நின்
றியங்கி யிருப்பவளே.

3. உள்ளம் குளிராதோ—பொய்யாணவ
ஊன மொழி யாதோ?
கள்ள முருகாதோ—அம்மா பக்திக்
கண்ணீர் பெருகாதோ?
வெள்ளக் கருணையிலே—இந்நாய் சிறு
வேட்கை தவிராதோ?
விள்ளற் கரியவளே—அனைத்திலு
மேவி யிருப்பவளே!

என்கிற பாரதி பாடலை உள்ளம் உருகிக் கண்ணீர் பெருக மூச்சுத் திணற நெஞ்சை யழுத்தும் துக்கத்துடன் பாடியவாறு புலம்பும் த்வனியைக் கேட்டதும், மதுசூதனின் சப்த நாடிகளும் அடங்கி

விட்டன. "ஐயோ! இதென்ன கோரம்! என் மனப் போராட்டத்திற்கு ஏத்த போராட்டமாகவே இந்தப் பாடல் அமைந்திருக்கிறதே!...ஏன் விளக்கும் இல்லாது இம்மாதிரிப் புலம்பவேண்டும்? என்ன காரணமாயிருக்கும்? எதற்கும் கதவை இடித்துப் பார்க்கலாம்" என்று எண்ணியபடியே தியங்கித் தியங்கி நின்றான்.

பிறகு சற்று தைரியம் செய்துகொண்டு, "விலாஸினீ! விலாஸினீ! கதவைத் திற"...என்றான். அயோமயமான நிலைமையில் பிரலாபித்துக்கொண்டிருந்த விலாஸினி, இந்த குரலைக் கேட்டதும் கருநாகத்தை மிதித்தவள்போல் துள்ளி அலறினாள். இப்போது அவன் வருவான் என்று கனவுகூடக் காணவில்லையாதலால் திடுக்கிட்டாள். "கதவைத் திறக்கலாமா! வேண்டாமா?" என்ற சந்தேகங்கூட ஒரு விநாடி எழுந்தது.

அடுத்த நிமிடமே அம்மாதிரிச் செய்ய மனம் இடங்கொடுக்கவில்லை. அந்த அழகிய சுந்தரவதனத்தை இன்னொருமுறை கண்ணால் காணவேண்டுமென்கிற தடுக்கமுடியாத வேட்கை உண்டாகிவிட்டதால் எழுந்து விளக்கைப் பொருத்திவிட்டுக் குரல் கொடுக்காது கதவைத் திறந்தாள்.

மதுசூதனனின் முகத்தைப் பார்த்ததும் பிரேமையின் சுழல் காற்று ஒரு க்ஷணநேரத்தில் சுழற்றியடித்து விலவிலக்கச் செய்துவிட்டது. அடுத்த நிமிடமே அந்த காற்று கடுந்தீயைப்போல் மாறி பரம வைராக்யத்தையும், குண்டு தைரியத்தையும் கொடுத்தது. உடனே மதுசூதனன் பிரமிக்கும்படி, "அண்ணா! வாருங்கள்; வாருங்கள்; இப்படி உட்காருங்கள். ஏது இந்த இரவு காலத்தில் இவ்வளவு தூரம் வந்தது?" என்று கேட்டாள்.

ஏற்கெனவே இடிந்து கதிகலங்கி தத்தளமாயிருக்கும் மதுசூதனனுக்கு விலாஸினியின் விபரீதமான மாறுதல் வார்த்தையைக் கேட்டதும் எரிமலையே புரண்டு அவன் தலையில் விழுந்துவிட்டது போன்ற வியப்பும், திகைப்பும் எல்லை மீறியுண்டாகி "விலாஸினி! நீயா பேசுகிறாய்?....என் இதயராணியாகிய விலாஸினியா இம்மாதிரி பேசுவது? இதென்னப் புதுமை?...ஏன் இந்த மாறுதல் விலாஸினி! இவை உன் மதுரகண்டத்திலிருந்து வரும் வார்த்தைகளா அல்லது என்னை எரிக்கவிடும் பாணங்களா?

என்று முடிப்பதற்குள் விலாஸினி சோகமும், ஏக்கமும், கோபமும், பரிதாபமும் ஒன்று கலந்த ஓர் சிரிப்பு பெரிதாகச் சிரித்து

விட்டு "பாணமா! என்ன பாணம்?... அண்ணனிடம் தங்கை பேசுவது பாணப் பிரயோகத்திற்குச் சமானமானதா! இந்தப் புதுமையை நான் இப்போதுதான் அறிகிறேன். அண்ணு! நீங்கள் நினைக்கும் விலாஸினி இங்கில்லை; அவள் இறந்தொழிந்தாள். அவளை இனிக் காணமுடியாது. இந்த விலாஸினி உங்கள் சகோதரி. நீங்கள் இஷ்டமிருந்தால் உட்காருங்கள்; இல்லையேல் போய்வாருங்கள்.

ஆனால் ஒன்று. இனி இப்பக்கம் பழய நினைவுடன் வரவேண்டாம். அண்ணன் முறையில் ஆயிரந்தரம் வாருங்கள்; அடியேன் சலிக்கமாட்டேன்...என் இந்தத் தடுமாற்றம்?...புலம்பலா! எதற்கு?.. இனி புலம்பலையும், பழய நினைவையும் மூட்டைகட்டி ஆற்றில் எறிந்து விட்டுத் தலை முழுகிப் பின் வீட்டிற்குச்சென்று தாய்தந்தையரின் இஷ்டப்படியே நடந்துகொண்டு உமது கடமையைச் செய்யும். மனிதன் தனது கடமையைச் செய்யாவிட்டால் அவன் உலகத்தில் மனித வர்க்கத்தில் சேரவேமுடியாது. ஆகையால், போய்வாரும். தாமதம் வேண்டாம்" என்று வெடுவெடுப்பான குரலில் கூறினுள்.

மதுசூதனனுக்கு ஒன்றுமே புரியவில்லை. விலாஸினிக்குத் திடீரென்று மூளை கலங்கி பயித்தியம் பிடித்துவிட்டதோ! என்ற கலவரமும் உண்டாகியது. அடுத்த நிமிடமே அவளுடைய மனத்திற்கு யாரோ கலக்கத்தை உண்டாக்கியிருக்கவேண்டும். இல்லாவிடில் இத்தகைய மாறுதல் வருவதற்கு ஒருபோதும் நியாயமில்லை" என்று தனக்குள் நினைக்கிருனேயன்றி அவளுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. கல்லாய்ச் சமைந்து க்ஷணநேரம் நின்றுன்.

மது :—விலாஸினீ! நானு உன் அண்ணன்! இதோ பாரு... என்னைச் சோதிக்கிருயா! அல்லது...

விலா:—அல்லது...என்ன? விளையாடுகிருயா என்று கேட்கிறீர்களா! விளையாட்டுக் காட்டும் விலாஸினி இறந்தாள்; கடமையை நினைப்பூட்டும் விலாஸினிதான் இப்போது உம்மெதிரில் பேசுகிருள். வீண் வார்த்தை எதற்கு? காதலுக்கு இடமில்லை. கடமைக்குத்தான் இடம் உண்டு. நீர் நினைப்பதுபோல் நடக்கும் விலாஸினி நானல்ல. முன்னறிதெய்வங்களை மகிழ்வித்து விவாகத்தைச் செய்துகொண்டு சுகமே வாழும். வீணசை வேண்டாம். போய்வாரும்.—என்று நிர்த்தாக்ஷிண்யமாய்க் கூறியவாறு மின்னல்போல் மறைந்து போனுள்.

மதுசூதனனுக்கு எல்லாம் பூடகமாயும், விபரீத பயங்கரமாயும் தோன்றியதேயன்றி தான் பூமியில் நின்று பேசுவதாய்த் தோன்

றவே இல்லை. "விலாஸினீ! விலாஸினீ! ஐயோ! போகாதே. இப்படி வாயேன். இதென்ன நிர்த்தாக்ஷிண்யம்? திடீரென்று உன் மனம் ஏன் இப்படி மாறுதலடைந்துவிட்டது?...விலாஸினீ! என்னுயிரை வதைக்காதே....என்னிதயம் வெடித்துவிடும்போலிருக்கிறதே! கதவைத்திற...விலாஸினீ!" என்று தன்னை மீறிய சோகத்துடன் கதறினன்.

விதி விதி, தலை விதி! இன்பக்காதலர்களின் நட்புப்பாதையில் முள் வேலியைப்போல் படர்ந்து மறைக்கையில், கதறினல் என்ன பலன்? முட்டிக்கொண்டால்தான் என்ன லாபம்? முள்வேலியைச் சிதைப்பதற்கு அந்த முழுமுதற் கடவுளையன்றி மனிதனல் முடியுமா? ஆகையால் வீண் புலம்பலால் இனி பயனில்லை" என்று உள்ளிருந்து வந்த குரலைக்கேட்டுப் பின்னும் கதி கலங்கினன்.

"விலாஸினி! முள்வேலியா?...இப்படிப்பட்ட வார்த்தை உன் வாயிலா வருகிறது? இனி என்னல் சகிக்கமுடியாது...ஏதோ! ஒரு நிமிஷம் நீ வெளிவந்து உன்னழகிய சந்திரவதனத்தைக் காட்டு... எங்கே...கதவைத்திற. ப்ரியே!...ப்ரேம விலாஸினீ!" என்று கல்லும் உருகும்படி அழைத்தான்.

உள்ளிருந்து வரும் விம்மலும், பொருமலும் மதுசூதனனின் இதயத்தைப் பிளந்துவிட்டதால் கதவை பலமாகத் தட்டினன். காலால் ஒருஉதை கொடுத்தான். கதவுசரியாகப் போடப்படாததால் தடாரென்று திறந்துகொண்டது. உள்ளத்தில் ப்ரேமை வெள்ளம் பொங்கிவரும் வேகத்தில் ஒன்றுமே தெரியாது, வெறி பிடித்தவன் போல், "விலாஸினீ! விலாஸினீ!" என்று கதறியவாறு அவள் படுத்துப் புலம்பும் இடத்திற்கு ஓடி அவளிரு கைகளையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு தலையைத் தூக்கி, "என் இன்பவாரிதியே! வேண்டாம்....இந்த துக்க சாகரத்தில் மிதக்கும் சங்கடம் வேண்டாம். எது எப்படியானலும் சரி. இனி என்னல் க்ஷணநேரமும் சகிக்கமுடியாது. சமூகமும், மற்றச் செருக்குகளும் என்னை என்ன வேண்டுமாயினும் செய்து தண்டித்துத் தன் பழியைத் தீர்த்துக் கொள்ளட்டும். நான் இனி சற்றும் இதற்கெல்லாம் பயப்படவே மாட்டேன். என்னுடைய இன்ப ராணியை இதற்காக நான் இழக்கவும்மாட்டேன்.

விலாஸினீ! இனி நாம் யாருக்காகப் பயப்படவேண்டும்? உலகத்தில் உன்னைவிட எனக்கு யாவும் த்ருணமாகத் தோன்று

இன்றன. நீ பயப்படாதே...கடவுள் நம்மைக் காப்பாற்றுது கைவிடமாட்டார். நாம் இருவரும் சொல்லாது எங்கேனும் போய் விடலாம். உன்னிடமும் என்னிடமும் உள்ள சங்கீதம் நமக்கு சுகமான ஜீவனத்தைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. ஆகையால் இப்போதே வந்துவிடு. விலாஸினீ! நாம் இந்தப் பாழும் மனிதர்களின் கண்ணில் படாது போய்விடலாம்" என்று அதீதமான ஆவேசத்துடன் கூறி விலாஸினியைத் தூக்கி உட்கார வைத்தான்.

விலாஸினிக்கு ஒன்றுமே தோன்றவில்லையெனினும் மதுசூதனின் பிடியிலிருத்து சடக்கென்று விலகிப்போய் அவனைத் தனது மான் விழிகளால் ஒரு முறை பார்த்தாள். "நாளை வாரும். உமதிஷ்டம்போல் போய்விடுவோம்" என்று மட்டும் துக்கம் தேங்கிய குரலில் கூறினள்.

அபாரமான விசனத்தில் தத்தளிக்கும் விலாஸினி இம்மட்டுமாவது அமிருததாரையை வார்ப்பதுபோன்ற பதில் கொடுத்தாளே என்று கட்டு மீறிய ஆனந்தத்தால் மதுசூதனின் உள்ளம் பூரித்தது. இப்போதே இன்னும் அதிகத் தொந்தரவு கொடுக்கக்கூடாதென்று தோன்றியதால், "விலாஸினி! என்னுள்ளம் குளிர்ந்தது. நாளை விடியும் முன்பு வருகிறேன்; நீ தயாராயிரு. நான் வருகிறேன்...விலாஸினீ! விலாஸினீ! புலம்பாதே; தைரியமாயிரு" என்று கூறிப் பின் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்ருன். என்னே குதூகலம்! என்னே ஆனந்தம்! என்னே பூரிப்பு!...அடாடா! விவரிக்கமுடியுமா?

ஒரு ரூபாய்க்கு 3 நாவல்கள்

உளுத்த இதயம்
மகிழ்ச்சி உதயம்
வத்ஸகுமார்

தனி விலை ரூ 1-6-0.
ரூ. 1. முன்பண மனுப்பினல்
தபாற் செலவு இனும்

26

“அடாடா! விவரிக்கமுடியுமா? என்னே குதூகலம்! என்னே ஆனந்தம்! என்னே பூரிப்பு! இத்தனை நாட்கள் பட்டினிக் கிடந்த ராஜம்மாளின் நிலைமையில் திடீரென்று காணப்பட்ட சந்தோஷத்தின் மிகுதியால் யானையின் பலம் எப்படியோ வந்து விட்டது.

தேம்பாக எழுந்து உட்கார்ந்து “உண்மையாகவா! நீங்கள் போய் தைரியமாய்க் கேட்டீர்களா! அப்படியா ஆணையிட்டு அந்த பெண் கூறினுள்?” என்று தன் கணவனை நோக்கிக் கேட்டாள்.

திரு :—நான் பொய்யா சொல்கிறேன். அங்கிருந்து இப்போது நேராக வருகிறேன். அந்தப் பெண்மணியின் ஒழுக்கமும், அடக்கமும், உத்தம குணமும், பிரமிக்கும்படியிருக்கின்றன. என்ன நல்லமாதிரி? எத்தனை அன்பு? அவளுடைய பரிதாபம் என் மனத்தை உருக்கிவிட்டது. அன்பு என்ருல் சாமான்யமான அன்பா அவள் கொண்டிருக்கிருள். அவளுடைய இதயத்தையே அர்ப்பணம் செய்திருக்கிருள் பாவம்! இந்தப் பாழும் கொலை ஒன்று இல்லையெனில் நான் அந்தப் பெண்ணை விட்டிருக்கவேமாட்டேன்.

ஐயோ! பாவம்! நான் சொல்லியவுடனே கடவுள் மீதும் என் மீதும் ஆணையிட்டு, தான் இனி அவன் முகத்தில்கூட விழிப்பதில்லை என்று கூறிவிட்டாள். அப்போது அவள் முகத்தில் ஜ்வலித்த ஜோதியை நான் என்னென்று கூறுவேன்? சீச்சீ!...கொலையாளுல் ஆய்விட்டுப் போகிறது. அவளையே பண்ணிவிடலாமா! என்று கூடத் தோன்றியது.

ராஜ :—ஐயையோ! குளிக்கப்போய் சேற்றைவாரிப் பூசிக் கொண்டு வந்தீர்களா! என்ன?...

திரு :—பதருதே ராஜம்! நான் அந்த அணங்கிற்குச் சத்ருவாகச் சென்றிருக்கையில் அனுகூலமாகப் பேசியிருப்பேனு! என்னமோ பேசினேன்; என்னமோ வந்தேன். காரியம் ஆகிவிட்டது. இனி அவனை அவள் ஒருபோதும் பார்க்கமாட்டாள். இந்த துக்ககரமான சம்பவத்தை அவன் கேட்டால் என்ன ரகளை நடக்குமோ என்ற பயம் என்னை பாதிக்கிறது.

ராஜம் :—நடப்பதற்கு இன்னும் என்ன விசேஷ நிகழ்ச்சிகள் இருக்கிறது. எல்லாந்தான் நடந்து முடிந்தாய்விட்டதே. இப்போது

அவனை அழைத்துவந்து முதலில் கிட்டுவிடம் சென்று மன்னிப்புப் பெற்று லக்ஷ்மியை அழைத்து வரச்சொல்லுங்கள். அதற்குப் பிறகு மற்றது பேசலாம்.

திரு :—மற்றது பேசுவதற்கு ஒன்றும் பாக்கி இல்லை. நான் வரும்போதே கோயிலில் கிட்டுவையும் லக்ஷ்மியையும் கண்டேன். விஷயத்தைக் கூறினேன். கிணறு வெட்டப் பூதம் கிளம்பி ஆடியது போல் விஷயம் இருக்கிறது. கிட்டுவின் தங்கை சேஷம்மாள் இருக்கிறாளே, அவளை மதுசூதனனுக்குக் கல்யாணம் செய்துகொண்டால்தான் நம் லக்ஷ்மியை அனுப்பமுடியுமாம்; இல்லாவிட்டால் முகோல்லாபம் செய்யமாட்டானும். மதுசூதனன் செய்த குற்றத்திற்கு இதுதான் தண்டனையாம். அப்படிச் செய்ய சம்மதப்பட்டு அதையுங்கூடத் தெரிவித்தால்தான் வாமுடியுமாம். இல்லையேல் அவ்விருவர்களுக்காகவும் தலைமுழுகிவிடலாமாம்.

ராஜ :—(அலறியவாறு) ஐயோ! தலைமுழுகிவிடுவதா? இதற்காக ஏன் இத்தனை பெரிய வார்த்தை சொல்லவேண்டும்?...அந்தப் பெண்ணுக்கு என்ன குறைவு? மூக்கும் முழியுமா ராஜாத்தியைப் போலத்தான் இருக்கிறாள். கொஞ்சம் கருப்பு; அதனாலென்ன பாதகம்? சற்று தலைகோணல், ரெட்டை மண்டை என்பீர்கள். காலத்து நாகரிகப்படி தலையைப் பிச்சோடா போட்டுப் புஷ்பத்தை வைத்துவிட்டால் சரியாகிவிடுகிறது. அதிர்ஷ்டத்தில் எத்தனையோ வித அடையாளம் சொல்வார்களல்லவா! வக்ரக் கண்ணு இருந்தால் அது ஒரு அதிர்ஷ்டமாம்.

திரு :—சரி சரி! அதில் பூனைக் கண்ணாகவும் இருந்துவிட்டால் பின்னும் அதிர்ஷ்டம் என்று சொல்லு. இந்த வர்ணனைகள் எதற்கு?

ராஜ:—போதும் உங்கள் நங்குகாட்டல். ஏன்? உங்கள் தாயார் கருப்புத்தானே, நீங்கள் சிகப்பாகப் பிறக்கவில்லையா என்ன? லக்ஷ்மியின் மாமியாரும் வெகு நாட்களாக என்னிடம் சொல்லிக் கொண்டிருக்கிறாள். ஒன்னுக்குள்ளே ஒன்னு நம்ம லக்ஷ்மிக்கு நல்ல ஆதரவாயிருக்கும். கட்டாயம் முடிக்கவேண்டியதுதான்.

திரு :—ராஜம்! அத்தனை கோரத்தை அவன் மணக்க நீ சம்மதப்படுகிறாயா! ரதியைப்போன்ற மங்கையின்மீது பிரேமை வைத்தவனை மடக்கி இந்த கோரஸ்வரூபத்தைக் காலில் கட்டுவது தர்மமா!

ராஜ :—நீங்களாக ஏதேதோ கற்பனை செய்து குதர்க்கத்தை

உண்டாக்கவேண்டாம். அவளுக்கென்ன குறைவு? நம்முடைய லக்ஷ்மியின் க்ஷேமத்திற்காக நாம் செய்துதான் ஆகவேண்டும். வீணாகக் கலவரத்தை உண்டாக்கிப் பின்னும் சொல்லவேண்டாம்.

இந்த அழுத்தமான வார்த்தையின் த்வனியில் சுயநலமும், பக்ஷ பாதமும் ஜ்வலித்ததைக் கண்ட திருவேங்கடத்தின் மனமே சற்று துடித்தது. தன் சொந்த மகளின் நலத்திற்காக அவள் துணிந்தது போல் இவன் மனம் துணியவில்லை. எனினும் வீட்டிலுள்ள நிலைமை, சந்தர்ப்பம், எல்லாம் விரோதமாகச் சேர்ந்து வாட்டியதால் அவனால் ஒன்றும் செய்யமுடியவில்லை. இத்தனை நாள் பட்டினி கிடந்த ராகாசி எங்கே தற்கொலை புரிந்துகொள்வாளோ! என்கிற பயம் ஒருபுறம் பாதித்தது. ஆனாலும் மனம் மட்டும் குழம்பியது. மதுசூதனனின் வரவுக்காக எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

விலாஸினியின் வீட்டிலிருந்து கிளம்பிய மதுசூதனன் ஒரே தீர்மானமாய் விலாஸினியை அழைத்துக்கொண்டு கண்காணாமல் ஓடிவிடுவது என்று உறுதி செய்துகொண்டதால் "வீட்டிற்கு வந்தால் அவர்கள் ஏதேனும் கேட்பார்கள்; பதில் சொல்லவேண்டி யிருக்கும்; ஆகையால் போகாமலிருந்துவிடுவதே சரி" என்று முடிவு செய்துகொண்டு ஆத்தங்கரைக்குப் போய்விட்டான்.

இரவு 9 மணி ஆகியது. ஸ்வாமிகள் வந்திருந்தால் கடைசி முறையாக அவரை தரிசனம் செய்துவிடுவோம்; பிறகு பார்க்க முடியுமோ, முடியாதோ என்றும் ஒரு யோசனை உதித்ததால் அங்கிருந்து டாக்டர் சொல்லிய இடத்திற்குவந்தான். ஸ்வாமிகள் வந்துவிட்டார் என்கிற செய்தி தெரிந்தது.

ஒருபுறம் வெட்கம்; ஒருபுறம் துக்கம். இரண்டும் பாதித்த வாறு சென்று ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து "ஸ்வாமீ! க்ஷமிக்க வேண்டும்" என்று கண்ணீர் பெருகக்கூறினான்.

ஸ்வாமிகளின் முகத்தில் எப்போதும் ஜ்வலிக்கும் தேஜஸ் பிரகாசிக்க, அவர் கையை அமர்த்தி ஆசீர்வதித்தபடியே புன்முறுவல் செய்தார். "என்னப்பா! உன் கதை வெகு ஸ்வாரஸ்யமான நாவல் போல் இருக்கிறதே. அன்று ஒருநாள் நான் சொல்லிய வார்த்தை சரியாகிவிட்டதா!...சற்றுமுன்புதான் உன் எஜமானராகிய டாக்டரும், உன் தகப்பனாரும் இங்குவந்து சகலத்தையும் தெரிவித்தார்கள்.

நான் உனக்குப் பலதரம் சொல்லியதுபோல் இன்றும் சொல்லுகிறேன். நீ எப்படித்தான் இருப்பினும் உன் கடமையை

சற்றும் கைவிடக்கூடாது. எவனொருவன் கடமையில் தவறுகிறானோ அவன் சண்டாளனிலுங் கொடிய சண்டாளனாவான் என்று நான் உனக்குப் பலதரம் எடுத்துச் சொல்லியும் மறந்துவிட்டாய்போலும்.

மதுசூதனா! உன் முன்னறிதெய்வங்களைத் திருப்திசெய்து உனது குடும்பத்தை முதலில் போஷித்து வா. அதுதான் உன் பிறவியின் ஸார்த்தகம். நீ சிறியவன், நான் அனுபவசாலி. காதல் என்பது கடினமானதோர் சோதனைதான். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் அதுதான் உனது வாழ்க்கை நிலை என்று, மற்ற முக்யங்களைக் கைவிட்டுவிடாதே. எல்லாவற்றையும் ஜெயிப்பவன் தான் சரியான வீரன்; ஆகையால் பட்டினி கிடக்கும் தாயாரைச் சாப்பிடச் சொல்லு" என்று அது சம்மந்தமாகவே பின்னும் பேசினார்.

பழய மதுசூதனனாயிருந்தால் இந்த உபதேசம் காதில் ஏறும். அவன்தான் புதிய மதுசூதனனாகிவிட்டானே. இவைகள் காதில் ஏறவே இல்லை. கேட்பதற்கும் பிடிக்காது வேதனையாயிருந்ததால் நாளை வருவதாகக் கூறிச் சடக்கென்று போய்விட்டான்.

ஒரு காலத்தில் ஸ்வாமிகளின் உபதேசத்திற்காகக் காத்திருந்த மனிதனுக்கு இப்போது கேட்கவும் பிடிக்கவில்லை. தன் தீர்மானப் படிச் செய்வதே சரி என்று முடிவு கட்டிக்கொண்டு இரவு கழிவதற்காக எதிர்பார்த்திருந்தான்.

பொழுது புலர்வதற்கு முன்பே புள்ளினங்கள் தம்தம் கடமைப் படிப் பாடிப் பறக்கத்தொடங்கின. "இருட்டோடு இருட்டாகப் போய்விடவேண்டும். இந்தப் பக்ஷபாத மனிதர்களின் முகத்தில் விழிக்காது போய் இன்பமாய் வாழவேண்டும்" என்று எண்ணிய படியே விலாஸினியின் வீட்டிற்குச் சென்றான். வீதிக்கதவு தாளிட்டிருந்தது.

வீதிப் பக்கமுள்ள ஜன்னலால் எட்டிப் பார்த்தான். இதே வீட்டில் விலாஸினியை முதன்முதல் தான் அழைத்து வந்தபோது இருந்த உணர்ச்சியும், உத்ஸாகமும் இப்போது இருக்கும் நிலையும் அவனுக்கே வியப்பாயிருந்தது. ஜன்னலருகில் சென்று மெல்லிய குரலில் "விலாஸினீ! விலாஸினீ! கதவைத்திற" என்று கூப்பிட்டான்.

அடுத்த நிமிடமே வீதிக்கதவு திறக்கப்பட்டது. ஆவலே வடிவாய் வாசற்படியருகில் சென்று "விலாஸினீ! ரெடியா?"....என்று அன்பு ததும்பக் கேட்டான். இவன் கேட்ட கேள்விக்கு மண்டை

யில் அடிப்பதுபோல் ஒரு குரல் "ஐயா! நான் விலாஸினியல்ல. இந்த வீட்டுக்காரி. இதோ இந்தக் கடிதத்தை உம்மிடம் விலாசினி கொடுக்கச் சொன்னாள்."

என்று முடிப்பதற்குள் மதுசூதனன் தீயை மிதித்தவன்போல் துள்ளியவாறு, "என்ன! என்ன! விலாஸினி கடிதம் கொடுத்தார்களா! ஏன்? அவர்களெங்கே?" என்று படபடப்பும் ஆவேசமும் நிறைந்து கேட்டான்.

வீட்டுக்காரி:—அவளுக்கு இந்த ஊரே பிடிக்கவில்லையாம். வேறு ஊரில் ஏதோ பிழைப்புக்கு உத்தியோகம் கிடைத்திருக்கிறதாம். அதனால் நேற்று இரவு வீட்டைக் காலி செய்துகொண்டு போய்விட்டாள். நீர் வந்தால் இந்த கடிதத்தை உம்மிடம் கொடுக்கும்படியும், வராவிட்டால் தபாலில் அனுப்பிவிடும்படியும் சொல்லி விட்டுப்போனாள். இந்தாருங்கள்—என்று கடிதத்தைக் கொடுத்தாள்.

அந்தோ! பரிதாபம்! பரிதாபம்! ஆவலே வடிவாய் வந்த காளையின் நெஞ்சம் எப்படித்தான் பதறித் துடிக்கும்? வானமிடிந்து தலைமீது விழுந்துவிட்டதைப்போல் தோன்றியது. கடிதத்தை வாங்கிக்கொண்டான்....பேச நாஎழுவில்லையெனினும் மெல்ல சமாளித்துக்கொண்டு, "அம்மணீ! அவர்கள் யார் துணையுடன் சென்றார்கள்? வேறு என்ன சொன்னார்கள்? எந்த ஊருக்குப் போவதாகத் தெரிவித்தார்கள்? என்று அடுக்கடுக்காய் கேள்விகளைக் கேட்டான்.

வீட்:—எனக்கு அதெல்லாம் ஒன்றுமே தெரியாது. நான் ஒரு மாதமாய் ஊரிலில்லை. நேற்று இரவுதான் வந்தேன். வந்து வீட்டைக் கவனிக்கையில் அவள் மேற்குறித்தபடிக் கூறிவிட்டு ஒரு ஜட்காவில் சாமான்களுடன் போனாள். மறு விவரம் ஒன்றும் எனக்குத் தெரியாது. கூட துணைக்கு யாருமே இல்லை. தன்னந்தனியாகத் தான் சென்றாள்—என்றாள்.

இதைக்கேட்டபிறகு அங்கு நிற்கமுடியாது துயரத்தினால் வெதும்பிவிட்ட மதுசூதனன் கடிதத்துடன் திரும்பினான். ஆனால் 'எங்கே செல்வது? என்ன செய்வது?' என்று ஒன்றுமே தோன்றவில்லை. கடிதத்தைப் படிப்பதற்கும் வெளிச்சமாகவில்லை. என்ன செய்வான் பாவம்! அவனுக்கு எந்த சமயத்திலும் ஆறுதலளிக்கும் ஆத்தங்கரைக்குச் சென்றான்.

மனக்கொந்தளிப்பும் ஆற்றின் இரைச்சலும் ஒன்றோடொன்று

போட்டியிட்டன. சூரியபகவானின் தயவுக்கு எதிர்பார்த்திருந் தானேயன்றி வீட்டிற்குப் போய் விளக்கில் படிக்க அவன் மனம் இசையவே இல்லை. எண்ணுததும் எண்ணி மனம் புண்ணுய் தவித் தான். சூர்யன் கம்பீரமாகத் தோன்றினன். கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தான்.

"அனேக நமஸ்காரங்கள்,

இம்மாதிரி ஓர் கடிதம் எழுதும்படி நேரும் என்று நான் கனவில்கூட நினைக்கவில்லை. ஆனல் விதி நினைவி லேயே காணும்படிச் செய்துவிட்டது. ஒரு அருமை யான பழம் உச்சக்கிளையில் இருப்பதைக் கண்டு அது எட்டுமா! தன்னல் பறிக்கமுடியுமா! என்பதைச் சற்றும் யோசிக்காமல் மரம் ஏறக்கூடத் தெரியாதவர்கள் உச் சாணிக்கிளையில் ஏறினல் என்ன கிடைக்கும்? அங்கிருந்து கீழே விழுவதுதான். அதுபோலவே நம்கதி முடிந்தது.

உங்கள் கடமையில் நீங்கள் தப்புவதற்காக நான் சேர்ந்திருப்பது மகா குற்றம் என்பதை உணர்ந்தும் நான் அதற்குத் தடங்கலாயிருப்பது சரியில்லை. கேவலம் ஓர் அல்பப் பெண்ணுக்காகப் பெற்றேரையும், வளர்த் தோரையும், மற்றேரையும் த்வேஷித்துக்கொண்டு ஓடி விடுவதால் ஒருவிதமான சுகமும் இல்லை; அழகும் இல்லை; தர்மமும் இல்லை.

ஒரு மனைவிக்குப் பின் ஒரு மனைவியை சமூகமும் சாஸ்திரமும் கொடுக்கும்; ஆனல் ஒரு மனிதனுக்கு ஒரு பிறவியில் ஒரேதரந்தான் முன்னறிதெய்வங்கள் கிடைக் கும். அவ்வரிய பொருள்களுக்கு மன வருத்தத்தை உண் டாக்கி நாம் வாழுவது ஓர் வாழ்வு ஆகாது. எல்லோ ருடைய சந்தோஷத்திற்குப் பாத்திரமாகி வாழ்க்கை நடத்தினல் உண்மையான இன்பத்தைக் காணலாமே யன்றி நாம் ஒண்டியாகச் சென்றுவிடுவது உத்தமர் களுக்கு அடுத்ததல்ல. ஆகையால் அந்த காரியத்தைச் செய்ய நான் ஒருபோதும் சம்மதிக்கமாட்டேன்.

உங்கள் மனத்திற்குச் சாந்தியையும், சந்தோஷத்தை யும் கொடுக்க நான் பரிபூரணமாகக் கடவுளைப் பிரார்த் திக்கின்றேன். நீங்கள் உங்கள் பெற்றேரைத் திருப்தி

செய்யத் தவறுதீர்கள். ஸ்ரீராமபிரானின் பித்ருவாக்ய பரி பாலனத்தையும், கீதையின்சாரத்தையும் மறக்காதீர்கள். டாக்டர் வீட்டில் சந்தித்தோம்; மருந்துபோல் ஒரு எண்ணம் தோன்றியது. மருந்துபாட்டல் உடைவதுபோல் உடைந்தது. அவ்வளவுதான். மனந்தேறிக் கடமையைச் செய்துக் களிப்புறுங்கள். என்னைப்பற்றி எவ்விதமான முயற்சியும் எடுத்துக்கொள்ளவேண்டாம். நான் உங்களுடன் வருவதாகச்சொல்லாதிருந்தால் நீங்கள் என்னை விட்டுப் போயிருக்கமாட்டீர்கள்; அதற்காகவே அப்படிச் சொன்னேன்.

இங்ஙனம்,
அபாக்யவதி"

இதைப் படித்ததும் அவனுடைய நிலைமை எப்படித்தானிருக்கும் பாவம்!...தான் அப்படியே ஆற்றில் குதித்துவிடலாமா! என்று எண்ணினன். "கடமை...கடமை...ஒரு மனிதனின் இன்பத்தைச் சிதைத்து துன்பப் படுகுழியில் தள்ளுவதற்குக் கடமைதான் சத்ருவாயமைந்தது....என் கண்மணி எங்கு சென்றுளோ! என்ன வானளோ! அடாடா! சோதனையே! இப்படியா என்கதை முடிந்தது. இந்த முடிவைக் கொடுப்பதற்காகவா கடவுள் இத்தனை ஆழமான பிரேமையை என்னிதயத்தில் ஊன்றச் செய்தார்?" என்று நினைக்கும்போது அவனுக்கு அயோமயமாகிவிட்டது.

கட்டாயம் அவள் எங்கும் போயிருக்கமாட்டாள். தற்கொலை புரிந்துகொள்ளத்தான் போயிருப்பாள். இந்தக் கொலைபாதகம் என்னை சேராதா! அப்படிப் பார்த்தால் ஒரு பயங்கரம்; இப்படிப் பார்த்தால் ஒரு பயங்கரம்....ஐயோ! என்ன சங்கடம்?" என்று தத்தளித்து உருகித் துடிக்கும் சமயம், ஸ்நானம் செய்வதற்காக ஸ்வாமிகள் ஆத்தங்கரைக்கு வந்தார்.

மதுசூதனனைக் கண்டதும் அவனைத் தட்டி எழுப்பி, "மதுசூதனு! இதென்ன ப்ரலாபம்? இங்கு என்ன செய்கிருய்? உன்னைக் காணுது உன் தகப்பனர் துடியாய்த் துடிக்கிருரே. உன் தாயாருக்குப் பிராணன் போய்விடும்போலாய்விட்டதாம். எல்லோரும் அலைகிருர்களே! எழுந்து வீட்டுக்குப் போப்பா! வீணுக இனி இந்தப் பிடிவாதம் செய்யாதே. அதோ உன் தகப்பனர் ஓடி வருகிருர்" என்று கூறினர்.

திருவேங்கடம் அலையக் குலைய ஓடிவந்து "அப்பா! என்வயிற் றில் பாலை வார்த்தாயா! உன் தாயாரின் உயிர் ஊசலாடுகிறது. சீக் கிரம் வாயேன்...இனிமேல் பட்டினி அரை நிமிடமும் தாங்காது பிராணன் கட்டாயம் போய்விடும்" என்று கெஞ்சி அழைத்தார்.

"உம்...இனி என்னதான் செய்யமுடியும்? எல்லாம் முடிந்தது; மடிந்தது. மனக்கோட்டை இடிந்தது. எதற்காக நாம் உயிர்வாழ வேண்டும்? "விலாஸினியைத் தேடக்கூட முடியாத நிலைமையில் நான் இருந்து என்ன! இறந்து என்ன? மகா பாவி என்னாலன்றோ அந்த அபலைக்கு இத்தகைய ஆபத்து நேர்ந்தது? இதுமட்டும் பாவ மல்லவா!" என்றெல்லாம் நினைத்துக் கலங்குகின்றானேயன்றி பதில் கூற முடியவில்லை.

இத்தனை தூரத்திற்குக் கொண்டுவந்தவர்கள் இனி விடுகிறார் களா! எல்லோரும் கூடிச் செய்த தொந்திரவில் மனம் முறிந்தது. வைராக்கியம் தலை தூக்கியது. உயிரற்ற பிணம்போலில்லாது உயி ருள்ள ஜடம்போல் மாறினான். வீட்டிற்கு வந்தான். இதுகாறும் கிட்டுவை அழைத்துவரும் ஒரே நிபந்தனையிருந்ததுபோய், இப்போது அவனுடைய சகோதரியைக் கல்யாணம் வேறு செய்துகொள்ள வேண்டுமென்று ஏற்பட்ட சட்டத்தைக் கேட்டதும் அவனைத் துண்டுதுண்டாக வெட்டுவதுபோன்ற சித்திரவதை செய்தது.

என்ன! கல்யாணமா! எனக்கா! ஐயோ சோதனையே அம்மா! நான் என்ன பாவத்தைச் செய்து இத்தகைய ஜென்ம மெடுத்தேன்? என்னைத் தூக்கிலேற்றி தண்டித்தாலுங்கூட நான் சந்தோஷமாய் ஏற்கக் காத்திருக்கிறேன். இந்தத் தண்டனை எனக்கு வேண்டாமே! தயவு செய்து இதை ரத்துசெய்யமாட்டீர்களா!" என்று கதறினான்.

உபவாசத்தினால் ஊடாடும் ராஜமா இதற்குச் சளைப்பவள்? வாயே திறக்கவில்லை. தன் மகள் வரும் வழியொன்றை மட்டும் கவனித்தாளேயன்றி இவனைப் பற்றிச் சற்றும் சிந்திக்கவில்லை. "சீச்சீ!...பாழுங்கட்டைக்கு இனி என்ன செய்தால்தான் என்ன? அவள் வயிற்றில் பிறந்திருந்தால் என்னை இந்த ஆட்டம் ஆட்ட மாட்டாளல்லவா! தொலையட்டும். மதுசூதனா! விலாஸினியுடன் உன் வாழ்வும் முடியட்டும். இனி உனக்கு இவ்வுலக இன்பத்தில் கடு களவுகூடக் கிடையாது. வைராக்யக் கட்டையாய், உனது கடமை களை மாத்திரம் தவறாது செய்யும் யந்திரமாய் வாழும் வாழ்க்கை

யைத் துடங்கு. இனி சஞ்சலம் எதற்கு? சங்கடம் எதற்கு? ஒரு கழுதையை அல்லது எருமையை, நாயை, பன்றியை எதைக் கொணர்ந்து நிறுத்தினும் உன் கடமை என்று எண்ணித் தாலியைக் கட்டு. தடுமாருதே. தெரிந்ததா! உனக்கு இதுதான் இனி கதி. சுகம்! போகம்! பாக்யம்! இன்பம்! சுதந்திரம் யாவும் இந்நிமிடத்துடன் மாண்டொழிந்தன. இனி அவைகளைக் கனவிலும் எண்ணுதே. எண்ணுதே! எண்ணுதே!

பழய பஜனை, பாடல் முதலிய பக்தி மார்க்கத்தைக் கைவிட்டு புதிய காதலுலகத்தில் பிரவேசித்து நூதன இன்பத்தில் திளைய கரை காணுது ஆசைப்பட்டாய். அந்த ஆசையெல்லாம் நிராசையாய், நிர்மூலமாய் பொடி சாம்பராகிவிட்டது. பக்தியை மறந்ததற்கு இதுதான் பலன்'' என்றெல்லாம் தனக்குள் வெகுவெகு ஆவேசத்துடன் எண்ணினன். பித்தன்போல்பிதற்றினன்; கதறினன்; முட்டிக்கொண்டான். மனப்புயல் சற்று தணிய மறுதினம் சென்றது. பிறகு முற்றிலும் புதியவனுக மாறிப்போய் புதுமை மதுசூதனனுகக் காணப்பட்டான். ராஜம்மாளின் விருப்பப்படியே கிட்டுவின் காலில்விழுந்து அவனையும், லக்ஷ்மியையும், அழைத்துவந்து ராஜம்மாளுடன் ஆனந்தமாக விருந்துண்ணச் செய்தான். இவன் இதயத் தத்தளிப்பும் மனக் குமுறலும் எருதின் நோய் காக்கைக்குத் தெரியாததுபோல் அவர்களுக்கென்ன தெரியும்? கொண்டாட்டம் குதூகலம் கும்மாளம் வீடு திம்மலோகப்படுகிறது.

சொந்த விஷயங்களில் யார் யார் தம் கடமையைத் தவறினும் உலக வம்பளப்பில் ஒரு சிறிதும் தவறுவதேயில்லை யல்லவா?... ராஜம்மாள் செய்தது ஆனுலும் ராக்ஷஸத்தனம் என்று சிலரும், அவன் செய்ததுதான் அநியாயம் என்று சிலரும், ஆனுலும் அந்தப் பெண்ணுக்காக, ஸ்வீகரித்த மகனை இத்தனை ஆட்டங் காட்டியது பிசகு என்று சிலரும், மதுசூதனனின் தியாகத்தையும், கடமைக்குக் கட்டுப்பட்டதையும் பாராட்டிச் சிலரும், என்ன இருந்தாலும் அந்த கோரஸ்வரூபத்தைக் கட்டாய மணம் செய்விப்பது கொஞ்சமும் நன்ருயில்லை என்று சிலரும், திருவேங்கடம் ராஜத்திற்கு இத்தனை இடங்கொடுத்ததனுல்தான் இவ்விபரீதம் நிகழ்ந்தது என்று சிலரும் தம்தம் போக்கின்படியே மதிப்புரை கொடுத்தார்கள்.

மறுபடியும் கல்யாண காரியத்தில் மும்முரமாக ராஜம்மாளும் லக்ஷ்மியும் ஈடுபட்டார்கள். ஒருபுறம் தமையன் ஒருபுறம் நாத்தனர்.

ஆகையால், இருபுறங்களிலிருந்தும் லக்ஷ்மிக்கு சக்கை போடுதான். கேட்கவேண்டுமா! ஒருடம்பு ஈருடம்பாகியது. அதிகாரத்தொனியும் ஆகாயத்தையளாவியது.

விலாஸினியைப்பற்றி என்ன பிரயாசைப்பட்டும் ஒன்றுமே தெரியவில்லை. எது எப்படியானுல் என்ன? சாதிக்க வேண்டுமென்கிற பிடிவாத புத்தியுடன் ஆரம்பித்த காரியம் நிற்குமா! சுபவேளையில், சுபலக்னத்தில், சுபமுகூர்த்தத்தில், சுபயோகத்தில், சுபமாக விவாகம் நடந்தேறியது. மதுசூதனன் யந்திரத்தினுலான பொம்மையைப்போல் நடந்தான்.

விவாகமாகிய பெருமை ராஜம்மாள், லக்ஷ்மி இருவருக்குந்தான் அதிகமாகப் பொங்கியதேயன்றி திருவேங்கடம் மனையிலிருக்கும் தம்பதிகளைப் பார்க்கக்கூட சகியாது கண்ணீர் உதிர்த்தான். விவாகத்திற்கு வந்த எல்லோரும் 'இத்தகைய பொருத்தமற்ற விவாகத்தைச் செய்வார்களோ!' என்று அங்கலாய்த்தார்களேயன்றி, ஒருவராவது தம்பதிகளை மனமுவந்து ஆசீர்வதிக்கவில்லை. அழகான விவாகம் நடந்தாயிற்று. இனிமேல் என்ன குறைவு?

முற்காலத்தைப்போல் சிறிய வயதுப் பெண்ணுயின் குடும்பத்திற்கு வருவதற்கு நாளாகும். இக்காலத்துப் பெண்களைக் கேட்கவேண்டுமா? மறுதினமே சம்சாரத்திற்குத் தயார். ராஜம்மாள் மருமகளை அழைத்துவந்து, தான் மாமியார் என்ற தோரணையில் வாழ்க்கை நடத்தவாரம்பித்தாள்.

மருமகளுடைய புதிய புடவைகள், நகைகள் முதலியவைகளைத் தன் மகளுக்குப் போட்டு அழகு பார்ப்பதும், மருமகள் வேலை செய்துத் தான் அதிகார தேவதையாய் இன்புறுவதும் அவளுக்குப் பிரமானந்தமாகியது. ஆனுல் கல்யாணத்தன்று தாலியைக் கட்டிய பிறகு மதுசூதனன் வீட்டு வழியே எட்டிப் பார்ப்பதில்லை.

பழையபடி பஜனை கோயில் உண்டு; டாக்டர் வீடு உண்டு. இம்மாதிரி தன் காலத்தை கடத்தத் தொடங்கி சில மாதகாலங்கூட கடந்தாயிற்று. "எங்கள் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு இம்மாதிரி உங்கள் வீட்டில் உழைப்பதற்காகவா அடிமைபோலாக்கினீர்கள்?" என்று பெண்வீட்டார் சீறி விழ வாரம்பித்தார்கள்.

ஊஹூம். யார் என்ன சொல்லியும் இது விஷயத்தில் மதுசூதனன் சற்றும் லக்ஷ்யமே செய்யவில்லை. பின்னும் சில தினங்களில் அவனுக்கு டாக்டரிடம் வேலை செய்யவும் பிடிக்காதுபோய்

விட்டது. அதையும் ராஜீநாமாச் செய்துவிட்டுத் தன்போக்காகச் சதா பஜனை செய்வதும், உத்ஸவம் நடத்துவதும், சுத்த பயித்தியம் போலாகிவிட்டான். சிலர் இவனுக்குப் பயித்தியமென்று கூடக் கூசாமல் கூறிப் பரிகஸித்தார்கள். விளையாட்டுபோல் இரண்டு வருடகாலம் எப்படியோ போனது தெரியாது போய்விட்டது.

வீட்டில் ராஜம்மாளுக்கும், மருமகளுக்கும் ஓயாது லடாபுடா சண்டை வேறு ஆரம்பமாகியது. "உனக்குச் சாமர்த்தியமுண்டானால் உன்னுடைய கணவனை நீயே சரிப்படுத்தி அழைத்து வா. நானா வேண்டாமென்கிறேன்" என்று ராஜம்மாள் சொல்லியது தான் தாமதம். அன்று முதல் வெகு துணிபுடன் தைரியமாய் பஜனைசபைக்கு வந்து பிசாசுபோல் நிற்கவாரம்பித்தாள்.

மதுசூதனன் ஸ்வாமிக்குச் செய்யும் பிரஸாதத்தில் கொஞ்சம் உண்பதும் அங்கேயே காலத்தைக் கழிப்பதுமாகவிருப்பதால் மனைவியின் முகங்கூட அவனுக்கு மறந்துவிட்டது. பக்தியிலீடுபட்டு மெய்மறந்து பஜனை செய்யும் ஆனந்தத்தைக் கண்டு பின்னும் அனேக பக்தர்கள் இவனுடன் சேர்ந்து பஜனை செய்யத் தொடங்கினார்கள். சிலர் ஆனந்தமாய்ப் பார்த்து மகிழ கும்பல் கூடினார்கள்.

தேக அசுகத்தின் காரணமாக வஸந்தபுரி ஜெமீந்தார் இந்த ஊரில் உள்ள தமது சொந்த பங்களாவில் குடியேறினர். அவருடைய குடும்பமே பக்தியில் மூழ்கியதென்று கூறினால் மிகையாகாது. ஜெமீந்தார் மதுசூதனனின் பஜனையின் பிரபாவத்தைக் கேட்டு மிக்க சந்தோஷமடைந்து ஒரு தினம் எல்லோரும் வியக்கும்படித் தம் குடும்பத்துடன் பஜனை கோயிலுக்கு விஜயம் செய்து ஸ்வாமிக்கு காணிக்கையும் செலுத்தினர்.

இதைக் கண்டு வயிற்றெரிச்சல் படுகிறவர்களும், வியப்புறுகிறவர்களும், சந்தோஷப்படுகிறவர்களும் கூறத் திறமேயில்லை. ஆனால் மதுசூதனனின் நிலைமை என்னவோ ஒரு சிறிதும் மாறவில்லை. விலாஸினியை இழந்தபிறகு எந்த பெண்களையும் அவன் கண்ணால் நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை. இன்னும் கேட்கப்போனால் அவனது தாயாரையும், தங்கையையும்கூட அவன் தலை நிமிர்ந்து பார்த்துப் பேசுவதை விட்டுவிட்டான் என்றால் அவனுடைய மனோபாவம் எவ்வளவு தூரம் வைராக்யத்தில் வயித்திருக்கிறது என்று கூறவேண்டுமா!

அவன் மனத்திற்கு ஜெமீந்தாரும் ஒன்றாகத் தெரிந்தது; வீதி

பெருக்கும் தோட்டியும் ஒன்ருகவே தோன்றியது. ஜமீந்தார் பணங் கொடுத்தாரே என்று அவரிடம் தனியாகப் பல்லிளிக்கவும், காக்காய் பிடிக்கவும் அவன் மனம் சற்றும் இடந்தரவில்லை. விரும்பவே இல்லை.

"இத்தனை சிறு வயதில் அபாரமான வைராக்யம் எவ்வாறு உண்டாகியது!" என்று எல்லோரும் பிரமித்தார்கள். இந்த நிலைமையில் தினம் இரண்டு காலமும் பஜனை, இரவு டோலோத்ஸவம், ஏகாதசி, அமாவாசை, மாஸப்பிறப்பு, விசேஷ பண்டிகை தினங்கள். விருததினங்கள் முதலிய நாட்களில் படத்துடன் ஊர்வலமாக பஜனைசெய்து வருவது வழக்கம்.

ஒருதினம் ஊர்வலத்திற்குப் பிறகு மண்டபத்திலேயே பஜனை நடந்துகொண்டிருக்கும்போது மதுசூதனனின் மனைவி தன் பத்திரகாளித் தாயாரை இழுத்துக்கொண்டுவந்து, "அம்மா! இருந்து இருந்து இந்தப் பித்துக்குளிப் பஜனை சாமியாருக்கு என்னைக் கட்டிக்கொடுத்தாயேடீ! மாப்பிள்ளையின் அழகைப் பாரு! தடி தடியா இத்தனை பெண்பிள்ளைப் பிடாரிகள் சுலபமாக பஜனை மடத்தில் கூடியிருக்கையில் அவர் வீட்டிற்கு ஏண்டீ வருவார்? என்னை இப்படித் தள்ளிக் கொலை செய்வதைவிட ஒரு கிணற்றில் தள்ளியிருக்கலாமே...புத்திகெட்ட மனுஷனுக்குப் பெண்டாட்டி எதற்கு? மானங்கெட்ட மனிதனுக்கு மரியாதை எதற்கு? தாளத்தைத் தட்டிக்கொண்டு ஊர் சுற்றும் கண்ருவியை யாரால் சகிக்கமுடியும்?" என்று சற்றும் அச்சமோ, நாணமோ, பயமோ ஒன்றுமில்லாது சேஷியம்மாள் நாட்டியமாடினாள்.

அந்தோ பாவம்! மானத்திற்கும், பக்திக்கும் இருப்பிடமாகிய மதுசூதனனின் காதில் இந்த வார்த்தைகள் விழுந்ததும் நெருப்பில் அவனைத் தூக்கிப்போட்டது போலாகிவிட்டது. அத்தனை ஜனங்களும் வியப்பால் தம்பித்தார்கள். "என்ன மானக்கேடு, என்ன துணிச்சல்? எல்லாம் என் தலையெழுத்து. சோதனையின் கொடுமை. ஊழ்வினையின் விளையாட்டு" என்று தலைகுனிந்து கண்ணீர்விட்டுக் கலங்கினான். இதயத்தில் செய்யும் சங்கடம் கூறத்திறமில்லை. அப்படியே வெடித்துவிடும் போலாகிவிட்டது. குனிந்த தலை நிமிரவே இல்லை. சொட்டும் கண்ணீர் அடங்கவில்லை. பெருமூச்சு தூத்தியடித்தது. எல்லாம் காலதேவதையின் பரீக்ஷை.

183046

பித்தபோதும் ஆங்கிலம் பாட்டிகளிடம் பலத்தது. அபாரமான ஆச்சரியத்தில் பிளந்துதள்ளுவார்கள். இக்காலத்தில்தான் ஆங்கிலம் கிள்ளுக் கீரையாக மலிந்து லக்ஷியமும் குறைந்துபோய்விட்டது. வீதியில் காய்கறி விற்கும் கிழவிகூட "யம்மா! டோம்மாட்டா...ட்ரம்ஸிச்கு...காபேஜ்...என்று ஆங்கிலப் பதங்களாலேயே விற்கிருள். சாமான்கள் விற்பவர்கள் பாக்கேட் ஒன்னனு ஸார்....ஸிக்ஸனு ஸார்....ஒரு வீசை ஒன்எய்ட்டு ஸார்...என்றெல்லாம் அளக்கிருர்கள். ஸில்குக்காரன் ஒன்யார்டு த்ரீருபீ...என்று இஸ்ஸை முழுங்கி பேரம் செய்கிருன். இம்மாதிரி காலத்தில் பாட்டிகள் பேசுவது வியப்பா! அந்த காலத்துப் பாட்டிகளும், இந்த காலத்துப் பாட்டிகளும் சேர்ந்தால் அவர்கள் பேச்சினுல் நாம் சற்று தமாஷாவைக் காண்கிருேம்; சந்தோஷப் படுகிருேம். இம்மாதம் இடமில்லாததால் எங்கப் பாட்டிமார்கள் அடுத்த மாதம் விஜயம் செய்வார்கள். மற்ற அம்சங்களைப்பற்றிப் புகழ்ந்து எழுதியுள்ள ஏனையோருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

வை. மு. கோ.

சந்தாநேயர்களுக்கு ஒரு அபூர்வ சந்தர்ப்பம்

உடனே முந்துங்கள். எத்தனைபுதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புகிறீர்களோ, அத்தனை எட்டணு விலையுள்ள நாவல்களை இனுமாகக் கொடுக்கப்படும். பணம் அனுப்புகையில் வேண்டிய நாவல்களின் பெயரைத் தெரிவித்து, 8 அணு நாவலுக்கு உள்நாட்டினர் 1 அணுவும், வெளிநாட்டினர் $1\frac{1}{2}$ அணுவும் தபாற் சேலவுக்காகச் சேர்த்தனுப்பவும்.

மானேஜர்.

பல்லாயிரக்கணக்கானவர்
படித்து மகிழ்ந்த
நமது பொன்விழா நாவல்

ஆத்மசக்தி

முதல் பதிப்பு—ஜனவரி 1940.
இரண்டாம் பதிப்பு—ஏப்ரல் 1940.
11 ஆப்டோன் படங்கள்
பலவர்ணங்களில் அச்சிடப்பட்டுள்ளன.
தபாற் சேலவு உள்பட
உள் நாடு — ரூ. 1-4
வெளி நாடு— 2 ஷில்லிங்
அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

நீங்கள் பல வருடங்களாக
எதிர்பார்த்தபுதிய பதிப்பு

மாதவமணி

முற்றிலும் புதிதாக மாற்றி
பெரிதாக எழுதப்பட்டுள்ளது
(முதல் பதிப்பு 24 பக்கங்கள் 3 அணு)
இரண்டாம் பதிப்பு 64 பக்கங்கள் 4 அணு
தபால் செலவு உள்பட
உள்நாடு ரூ. 0—4—9 ஸ்டாம்பு
வெளி நாடு-2 போஸ்டல்கூப்பன்கள்
அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

"JAGANMOHINI" Vol. XVII No. 10. Regd. No. M. 2210.

கூந்தலை

அழகாயிருக்கச் செய்ய

டாடா

கம்பெனியாரின்

பரிமள கூந்தல்

தேங்காயெண்ணெயை

உபயோகித்து வாருங்கள்.

மற்றும் டாடா கூந்தல் தயாரிப்புகளாவன:—தேங்காயெண்ணெய் ஷாம்பூ, ஜேய் சரக்குகள், லைம்ஜூஸும் க்ளிஸரைனும், டாடா பிரில்லியன்டைன். அனேகமாக எல்லா பிரபலக்கடைகளிலும் கிடைக்கும்.

எப்போதும் கிடைக்கும் இடம்:

டாம்கோ விற்பனை இலாகா.,

19-A, வாணியர் தெரு, மதராஸ்.

கூபன்.

A TATA PRODUCT

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்.,
பம்பாய் ஹவுஸ், ப்ரூஸ் தெரு, பம்பாய்.

தயவுசெய்து உங்கள் கூந்தல் தயாரிப்புகளின் ஸாம்பிள்கள் கொஞ்சம் எனக்கு இலவசமாக அனுப்பவும். தபாற் செலவிற்காக ஒரு அணா ஸ்டாம்பு இத்துடன் அனுப்புகிறேன்.

பெயர்..

விலாசம்..

.................................ஜீ. ஜெ. JM. 1.

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, 26, CAR STREET, TRIPLICANE, MADRAS.